ங. திருந்தியபூமாலை தொடுத்துப்பரமனுக்குச்
சீராகச்சாத்திட மனத்தெண்ணி இந்த
அருந்தவர்தனிலே கோயிலைநோக்கியே
அகமுருகிப்பல தந்திபண்ணி அன்பால்
விரைத்துயர்வீதியில் வரலோடும் தன்மேல்
பொருந்தியபாகர்க ளுண்டனீடும் பெரு
வெஞ்சினத்தொடு பின்தொடர்ந்து
அஞ்சிடக்கரி சென்றடர்ந்து
விளங்கிடுங்கை யதனில்தத்தும்
வளங்கொள்தண்டில உயரத்தொங்கும் (மலர்க்)

கூ-விருத்தம்.

பாகரீதறிந்துசண்டமாருதம்போற் பயத்துடன்யானையைக்கொண்
டுபோகக்கண்டே, ஆகதூலணிதொண்டர்வருந்தித்தண்டா லடித்தி
டவேபின்றொடரும்போதுமூப்பால், வேகமாய்ச்செலமாட்டார்சிவ
தாவென்று விழுந்தலறநண்ணுமெறிபத்தர்தாங்கேட்டு, டேகியானையி
னைபொகர்மாள எறிந்திட்டார்தொண்டர்புகழறிந்திட்டாரே.

கூ-கீர்த்தனம்-ராகம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

பட்டவர்த்தனமும்பட் டிடப்புரிந்தார் சிவ
பத்தர்மகிமையெல் லாந்தெரிந்தார்.

அனுபல்லவி.

இட்டமாயானைமேல் ஏறிநடத்திவரும்
இருவருங்குத்துக்கோல்க் காரர்கள்மூவரும் (பட்ட)

சரணங்கள்.

க. பட்டவர்த்தனத்தின்பின் செல்லமாட்டாமல்விழுந்து
படியினிற்கைகளீ யடித்தெழுந்து நின்று
இட்டமானசிவ னேயெனமுறையிட
எறிபத்தரிவரடி மிசைவிழுந்து இந்தக்
கட்டஞ்செய்தயானை யெங்கனேவேகனன்று
கழறலும்மலர்களைச் சிதறிப்பிழைத்தகன்று
நட்டமில்லாமலிந்தத் தெருவழிசென்றதென்று
கைகுரைத்திடஎறி பத்தர்விரைந்துசென்று (பட்ட)

உ. ராசனன்பர்க்குவழிப் பகையானையாதலால்
இதைக்கொல்வேனெனமழு வெடுத்தோடி யிந்தக்
காசினிமிசையிது பிழைப்பதெங்கென்றுசூறைக்
காற்றும்வீழித்தியும் போற் கூடி மிகு
தேசுறும்உம்பரும் இம்பரும்ஒருக்காலே
சேர்ந்துதடுத்திட்டாலுந் துண்டித்தென்மழுவாலே
நாசஞ்செய்வேனென்று மிகுங்கோபமேன்மேலே
நண்ணவிரைந்துசிங்கம் பாய்ந்துகொல்வதுபோலே (பட்ட)

ங. நிலங்குலுங்கிடப்பாய்ந்த இவரைக்கோபத்தினெடும்
நிறைதழல்விழியானை புவி மீதில் வனமை
துலங்கிடவேபிடித் திடவிலக்கிமழுவால்

திதிக்கையினேத்துண்டித் திடும் போதில் அது
விலக்கிக்கரும்பனையை வெட்டினும்போற்கிதறி
விழுந்தபொழுதிற்கருங் கடலெனவேக்கறிக்
கலக்கியறிவும்அழிந் தங்கமெல்லாம்பதறிக்
கருவரைவிழுந்தாற்போல் விழுந்துகாலையுதமிப் (பட்ட)

ச - விருத்தம்.

பட்டமால்யானேயொடுபோகர்தாமும் பட்டவுடன்சிலபாகர்மன்
னன்வாசல், கிட்டியேகாவலாளருக்குச்சொல்லக் கேட்டவர்மன்ன
னேப்பணிந்துன்யானேயோடு, விட்டபாகரையும்வதைசெய்தாரென்
றுவிளம்பிஞர்பாகரெனவுரைத்தபோதில்,இட்டமாமொருபரியிலே
றிமன்னனேகினனன்கடுங்கோபியாகினனே.

ச-கீர்த்தனம்-இராகம்-ஆனந்தபைரவி-மி-சாபுதாளம்.

பல்லவி.

மன்னன்வந்தானே குதிரைமேல் மன்னன்வந்தானே.

அநுபல்லவி.

மின்னுமாதங்கள் கன்னவதைத்ததைச்
சொன்னபோதினில் மன்னுகோபத்தால்
இன்னதெவர்செய்த தென்னவேன்று கேளாமலன்று (மன்)

சரணங்கள்.

க. தந்திரத்தொழில் மந்திரிகள் கண்டு சேனைகள்சோரச்
சாற்றயாவரும் ஆற்றல்மிகக்கொண்டு விரைவாகவே
அந்தரத்தைமை றைந்திடச்செயும்
உந்தும்ஊடை யணிந்திடுங்கொடி
தந்திருநிரைபொ ருந்துதேரும் கற்புகழ்ச்சோழ (மன்)

உ. துங்களழுமுச லக்கள்மழு கண்டு வேலேட்டிவில்வாள்
சுடர்சக்கரமுதற் படைகள்மிகக்கொண்டு வீரரார்த்திடச்
சங்குதாரைமு ழங்குபோரிசின்
னக்கள்கண்டையி லங்குபம்பைகள்
தங்கிடித்துடி பொங்குகடல்போலே ஆர்க்கறுன்னரே(மன்)

க. வென்றிமிருபடை அன்றுபின்னுந் தொடர்ந்திடத்தான்
வேகமாகவே யேகி முன்னுசை விதியில்வந்து
பொன்றிகழருவி தன்றுமொருகருங்
குன்றமெனப்புரள் கின்றகரியொடு
சென்றபாகரைக் கொன்றுயர்திடத்தில் நின்றவரிடத்தில்(மன்)

ரு - விருத்தம்.

விரைவினில்வந்தானேயொடுபோகர்மாண்டு விழுந்தவிடத்தினிற்ப
ரைகவர்தம்மைக்காணுன், எரிமழுவேந்தியஎறிபத்தரைமுன்கண்டான்
இவர்கொன்றுரெனவணரான்கொன்றுர்யாரென்,துரைசெயலுமுன்
னுனேமுன்புநிற்கும் உரமுடையமன்னருண்டோகொன்றுர்நின்ற,திரு
மழுக்கொண்டவரென்றுபாகர்கூறக் தெரிந்திட்டான்மன்னனிதுபுரி
ந்திட்டானே.

ரு-கீர்த்தனம்-இராகம்-யமுனாகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

மன்னவன்பணிந்தானே எறிபத்தரை மன்னவன்பணிந்தானே.

அநுபல்லவி.

தன்னுடையபடைகள் சார்ந்திடாமல்த்தடுத்து (மன்)

சரணங்கள்.

க. எழில்சேர்குதிரையைவிட் டிழிந்தானன்பர் கண்ணிப்
பிழைசெய்யாவிடிற்கொல்லார்பெருங்குணத்தாரென்றெண்ணி(ம

உ. வேறொன்றுநான்செய்யா விடினும்அன்பர் மிஞ்சிச்
சீறும்படிக்குப்பிழை செய்ததென்னேவென் றஞ்சி (மன்)

கூ. அங்கிதுகேட்டதுதான் அடியேனென ஏங்கி
இங்குகடந்தறி யேனெனவே நடுங்கி (மன்)

ச. இந்தயானைசெய்திங்குக் கிதவும்பாகரும் வீழச்
சிந்தியதுபோதுமோ செப்புமென்று சோழ (மன்)

கூ-விருத்தம்.

அரசர்தொழுச்சிவகாமியாரானுக்கெனக்கொணர்ந்த
திருமலையுன்னேசிதைத்ததனுலதைவதைத்தேன்
கருதிவிடாப்பாகரையுங்கண்டிதத்தேனென்றன்பர்
உரைசெயலுமன்னவருமுத்தமருமித்துசெய்வார்.

க-கண்ணிகள்-இராகம்-பந்துவராளி-திரிபுடதாளம்.

க. சங்கரர்அடியார்க்குச் செய்தஅபராதத்துக்
கிங்கிதுபோதாதென்னையும் விட்ட வேண்டும்
மங்கலமழுவினற் கொல்லக்கூடாதென்று
செங்கையால்வாளேமன்னவர் நீட்ட.

உ. நீட்டுமன்னரையெறி பத்தர்பார்த்திவரன்பின்
னிலையைக்கண்டேனிவர்தரும் வானை வாங்க

மாட்டோமென்றுரைத்தாமே வெட்டிக்கொள்வாரென்று
மனமஞ்சிவாங்கினர் அவ்வேளை.

கூ. வாங்கியதொண்டரைப் பணிந்தென்பிழையைத்தீர்க்க
வாளினலென்னைக்கொன்றருள் மிஞ்சி யெனக்
கிங்கிவருதவிசெய் திடப்பெற்றேனெனமன்னர்
இயம்பலுமெறிபத்தர் மிகவஞ்சி.

சு. யானையும்பாகரும் மாளவும்வாஞ்சாத்தந்
தென்னையுங்கொல்லுமென்றார்கண்ணினி அன்பர்
ஆனவிவர்க்குத்தீங்கு நினைத்தேன்முன்னகவென்
ஆருயிரைவிடுவே னென வெண்ணி.

ரு. புரவலர்தரும்வாளா லன்பர்தங்கழுத்தினிற்
பூட்டியரியத்தொடங்கலும் நேரே மன்னர்
பெரியோர்செயலென்னென்று கையையும்வாளையும்
பெருந்தோள்வலியாற்கூட்டிப்பிடித்தாரே.

பெரியபுராணத்திரு விருத்தம்.

வளவனர்விடாதுபற்றமாதவர்வருந்திநிற்ப
அளவிலாப்பரிவில்வந்தவிடுக்கணையகற்றவேண்டிக்
களமணிவளத்துச்செய்யகண்ணுதலருளால்வாக்குக்
கினரொளிவிசும்பின்மேல்வந்தெழுந்ததுபலருங்கேட்ப.

க - கீர்த்தனம் -ஹிராகம்-பிலகரி - மி - சாபுதாளம்.

பல்லவி.

எழுந்ததேயொருவாக்குப் பலருங்கேட்க (எழுந்த)

அநுபல்லவி.

செழுந்திருமழுவினல அழிந்துடல் விழுந்திடச்
செத்தபாகரொடும் அத்தியும் எழுந்திட (எழுந்த)

சரணங்கள்.

க. சங்கரைப்பணியும் உங்கள் அன்பைச
சகத்திலிளக்கிடத் தில்கள் சூடும்
தங்கரருளால்மல நிங்குவிழச் சினத்தில்
துன்னியானைசெய்த தென்னவேக னைத்தில் (எழுந்த)

உ. கனத்திற்பூட்டியவாளே யெறிந்து தொண்டர்
காவலரைப்பணிந்தார் செறிந்து அவரும்

உளத்தன்பொடும்பணியக் களித்தனலரும் பார்க்க
உம்பர்பொழியுமலர் அம்புவியினைப் போர்க்க (எழுந்த)

கூ. இருவரும்விண்ணினிலெழுந்த வாக்கை ஈசன்
இறைஞ்சியின்பக்கடலி லழுந்த திகழ
அருளினற்சிவகாமி யார்குடலை புகழ (எழுந்த)
அருமலர்கிறைந்திட அவருங்கண்டு

சு. நாயபுகழ்ச்சோழர் முன்னம் அங்கே
நாங்கியெழுகாற்போற்கன்னம் தன்னில்
பாயுமதத்தோடிடி போல்முழக்கம் வழங்கிப்
பட்டவர்த்தனத்தொடு பாகர்வர முழங்கி (எழுந்த)

எ- விருத்தம்.

அன்னபொழுதன்பரரசரைத்தாழ்ந்திந்த வீனமிசையெழுந்த
ருளுமெனவவ்வாறே, மன்னர்செலும்போதுசிவகாமியாண்டார்மறி
ழ்ந்தரனுலயமடைந்தார்மன்னர்மேன்மை, யுன்னியெறிபத்தகிவ்வா
றியற்றிப்பன்னு, நூறைந்துகயிலையிற்கணநாயகராயுற்றார், இன்னவர்
தாளவணங்கியேனிநாத நிசைசொல்வேன்பிறவியெனும்வசைவெ
ல்வேனே.

எறிபத்தநாயனர்புராணமுற்றிற்று.

ஆ-திருவிருத்தம்-எ-கீர்த்தனம்-நிச-கண்ணிகள்-கடு.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கூ - வது. ஏனாதிநாதநாயனர்புராணம்.

க- விருத்தம்.

குவிர்சோழநாட்டெயினனூரிலீழக்குலச்சான்றோனேனாதர்
நீற்பின், உளவன்பால்வழிபாடுசெய்வார்மன்னர்க் குயரும்வாள்வித்
தைகற்பித்தனலுண்டாம், வளமெல்லாமீசன்பர்களித்தொன்
னரும் வணங்கவாழ்நாளினில் வாட்டொழிலேத்தாலும், விளைவுசெ
யுமதிசூரனென்பானோர்நாள் மேவினன்போர்க்கிவரைக்கூவினனே.

க. கீர்த்தனம் -ஹிராகம்-சுருட்டி - ஆதிதாளம்.

பல்லவி.

ஏனாதிநாதரை யழைத்தானே போர்
இயற்றவென்னிச்சினங்கனற்றானே.

அனுபல்லவி.

தேனூருங்கொடைவேந்தர் தமக்குமுற்ற
வானூர்க்கும்பல மாந்தர் தங்களுக்குஞ்
சித்திரவாள்வித்தையையு மைத்திடலால் மொய்த்த
செல்வமெல்லாம் நலல்வன்பாற்செல்வமெனவைத்த (எனதி)

சரணங்கள்.

க. வாளின்றொழிலினிலெக் காலும்பெரியபுகழ்
நீளுந்திறலுடைய சமைப்போலே யினி
மன்னுஞ்சகத்தினிலைட்டத் துன்னுந்திறத்தரிலே
யென்னும்படியுதித்த நினைவாலே தன்
தோளின்பெலத்தை யெண்ணி யெண்ணியே
மூளுஞ்சொருக்கு நண்ணி நிறைந்தபரி
சுத்தமனப் பத்தினிடை வைத்தவகங் காரன்
துட்டனலம் விட்டரைபு ரட்டமதி சூரன் (எனதி)

உ. கற்குந்தொழினினையெ வர்க்குந் தெரிந்திடவு
ரைக்குங்குருவெனுந்தன் புகழ்குறைய அதிற்
காணுந்தனங்களெல்லாம் நாணும்படிகுறையப்
பேணுந்தொண்டர்க்குவளர்நிதிநிறைய வின்னில்
நிமிருஞ்சூரிய சூலே ஒளிகுறைந்தி
ருங்குஞ்சந்திரன்போலே தொழில்மாறுங்கி
ங்கையிலி வந்ததென கொந்தவிசை வாசி
நெஞ்சிலிடர் மிஞ்சிடவே வந்சகலு மேவி (எனதி)

ங. ஓதும்வீரனையெப் போதும்புகழ்ந் தனிந்து
நேதந்தவிருமன்பர் மனையின்முன்பு சுற்றுக்
கோடுஞ்சேனைகளொடு நீடும்படையுங்கொண்டி
நாடுங்கொடியவனுமடைக்கபின்பு போரில்
நிகரச்செயித்த நிரர் வாள்வித்தையை
யெதிர்ப்பற்ருரிய வீரர் என்றிருசூரன்
சிங்கமது தங்கிமுழங் குங்குகையின் பாலே
சின்னகரிமுன்னழைக்கும் அன்னசெயல்போலே (எனதி)

உ - விருத்தம்.

கோர்வக்கடலதி சூரன்படையொடியேங்கமர்செயவாவென்ன
யார்வந்தவரென வேயன்பரும்மிற லேறும்புயெ னவேகூட்ப

போர்வெந்தொழிலிவர் பால்வந்தறிபவர் போர்வந்ததுவென்வேகுற
ஓர்வம்பெறுமுற வோருந்துணைவர ஆருஞ்சமரினில்நேர்வாரே.

உ. கீர்த்தனம் - இராகம் - பந்துவராளி - மி - சாபுதாளம்.

பல்லவி.

போரினிலெதிர்ந்தாரே எனதிநாதர் போரினிலெதிர்ந்தாரே.

அனுபல்லவி.

போரினிலெதிர்ந்தாரே சிரினில்முதிர்ந்தாரே
பொருந்தும்வாள்பலகையுந்திருந்துகீரிருகையும்
பொலியுங்காலிலணியும் ஒலிகொள்வீரமணியும்
பொங்குகச்சினைக்கட்டிவெங்களத்தினைக்கிட்டிப் (போரி)

சரணங்கள்.

க. துஷ்டனுமதிசூரன் மட்டிலாரவகங்காரன்
சுடர்விடுவாளினன் படர்நெடுந்தோளினன்
சூதாம்வஞ்சமனத்தன் தீதேமிஞ்சுனத்தன்
சுதியினும்வெய்யன் கொடிதாகியபொய்யன்
துய்யவன்புர்தமைப்பார்த்துக் கிடுகிடெனா
வெய்யவிடியென வார்த்து நாமிருவரும்
துலங்கிடப்பெரும்பாரில் கலங்கிடச்செயும்போரில்
தோற்றிடாதபேரே வாள்வித்தையு
ஆற்றலாக நேரே சொல்லினைவக்கும்
தொழில்செய்வதெனலோடும் அழகாகவேநாடும்
தொண்டருமதையறிந்து மனத்தினில்
மண்டுமகிழ்வு செறிந்து அதிசூரன்
சொன்னவிடத்தினில் மன்னுதிடத்தினில்
சூரருமடைந்தாரே இருவர்படை
வீரருமிடைந்தாரே அப்பொழுததி
சூரன்படையுமிக்க விரர்படையுமுக்க
தோற்றியசின முதிர்ந்தார் தங்களுடைய
ஆற்றல்தெரியவெதிர்ந்தார் மலைபோலுயர்
தோளினைகொத்தட்டி யாளியெனவதட்டிச்
சொரியும்புனல்கொள்மேகம் கூட்டமாக்கூடி
விரியுமின்னல நேகம் பளப்பெனத்
துன்றியந்தவிணையில் நின்றிழிந்துமண்ணில்

கொளிக்குமிடிகளோடும் ஒருகாலத்தில்
கினத்துடனம சாடும் செய்கைபோலத்
தொடர்ந்தனர்முனைவாளும் கெடுங்கேடகமும்நீரும்
துணைக்கைகொண்டுமுடுக்குவார் பலகையின்வட்
டணைக்குளுட லொடுக்குவார் நாகவீரர்
சுகைநாவைப்புவிமேலேயணியாய்ட்டதல்போலே
துங்கவேலினை விடிப்பார் சிலவாதைத்
தங்கள்வேல்கொடுதடுப்பார் வில்லைவளைத்துக்
கொடுத்துக்கணைகள்சால அடுத்திடுமழைக்காலச்
சோனையைப்போற்பெய்யச் சேனையிப்படிச்செய்யப் (போரி)

உ. வெற்றியிருவகையில் உற்றசேனைகள்கையில்
வெஞ்சிலையைவளைத்து மிஞ்சுசினம்விளைத்து
விழியினிற்கனல்சிந்தி யெழுஞ்சென்றதென்மூக்தி
வெய்யகணைதொடுத்துக் கையினலைதொடுத்து
வேகமாக விடிப்பார் எதிருங்கெதிர்
ஆங்கவெய்தடுப்பார் சிலர்கணைகள்
விட்டவுடனேவந்து பட்டிடவேகொந்து
வில்லுங்கையு மழிந்தார் தோள்களையும்
சொல்லுமுன்னமொழிந்தார் கால்களற்று
மிடலுற்றகாற்றலே அடியற்றமரம்போலே
விழுந்திவ்வார்சிலபேர் இரத்தவெள்ளத்
தழுந்திவ்வார்சிலபேர் மலர்மாலை
மேவுசிரமற்றபேரும் நாவிலீரமிற்றபேரும்
மெய்கள்துளை பட்டபேரும் அப்போதுதம்
செய்கைகளை விட்டபேரும் சாரிகையாய்
விரைவாகச்சினம்பொங்கித் திரிவாருமிருந்தங்கி
வினைவற விழிப்பாரும் கைகளைமாகக்
கிளையெனக்கழிப்பாரும் நன்மையாக
மிளிரும்மிருகுறைத்து வளரும்வலுமைவத்து
விடவுமுள்ளனவென்னும் கொடுக்கும்பண்
புடையவெனக்குன்றும் தங்கள்கரத்து
வில்லொடியிறுமுனை வல்லசுரிகைதனை
விசையுடன்விடுவாரும் உடனெனிலே
பிசியே கெடுவாரும் ஒலைபொழுதில

விரியக்குருதியாறுய்ப் பெருகக்குடல்கள்கூறுய்
வேறுவேறுயடர்ந்தனவே பிணங்களெல்லாம்
தாறுமாறுக்கிடந்தனவே கவந்தங்கள்
வேடிக்கையாயாட்டம் ஆட்டப்பேயின்கூட்டம்
விரும்பிக்கைகொட்டினவே நாய்நரிகாகம்
பருந்தொக்கக் கிட்டினவே யிருவகையில்
வெருண்டெதிர்த்திடும்போரில்மிகுந்தனேகர்போரில்
மீண்டிடாமல்மருண்டு மாண்டுபோனதைக் கண்டு(போரி)

ங. இப்படிமீதினில் இப்படிப்போர்தனில்
இரண்டுகையினுமாகப் புரண்டனேகர்சாக
வுதிராதர்பார்த்து வானேனெனவேயார்த்து
இறந்ததம்படைபோகச் சிறந்தவர்பின்பாக
எதிர்த்துமுன்பாய்ந்தாரே சிலர்கள்பாய்ந்த
அதிர்ச்சியால்மாய்ந்தாரே வீரதண்டை
இசையுறத்தொனிசெய்ய விசைபெறவேவெய்ய
எரியுமிழ்வாள் தாங்கிச் சாரிகையாய்ப்
பெரியவர்சினமோங்கிப் போர்புரிந்திட
இதின்மிகுசினஞ்சேர்ந்து அதிசூரன்படைகோக்கி
இனமாகக் கூடினரே சூரியனைப்
பனிபோலமூடினரே அக்காலத்தில்
சனன்பர்வாளை விசையந்தவேளை
எழுந்துடல்களைக் கிழிப்பார் எதிர்த்தவர்
கொழுந்தசைகளைக்கழிப்பார் கெடுங்கையால்
எற்றுவார்சிலபேரைப் பற்றுவார்சிலபேரை
இடிப்பார்சிலபேரை இரத்தங்கக்க
அடிப்பார்சிலபேரை சிரத்திலெடுத்து
இடையற்றபேர்களுந் துடையற்றபேர்களும்
எய்த்துக்கத்திவிழுவாரும் விழுந்தவுடன்
தத்தித்தத்தியெழுவாரும் ஆவியெவரும்
இரவிகதிர்கள்மண்டை இரத்தில்லைவரக்கண்டை
இரவென மடிந்தாரே எதிர்த்தவர்கள்
விரைவாகமுடிந்தாரே எதிர்க்கிடாமல்
இருந்தவாமெய்ஞ்ஞானம் பொருந்தும்போதஞ்ஞானம்
எனனவே யாருதே அதிசூரனும்

அன்னபோதுநேரே வந்திட்டும்
எழில்கொண்டவாள்பற்றி விழிகொள்ளாவகைசுற்றி
எய்திவிரைந்துகிட்டித் திருத்தொண்டரும்
கொய்திலவனைக்கட்டிப் பிடிக்கும்போதில்
இதயத்துறுகுரூரன் அதிரூரனெனும்பேரன்
இமைக்குமுன்ஒளித்தோட்டத் தமக்குவிஜயங்கூட்டப் (போரி)

கூ - விருத்தம்.

வல்லவர்க்குப்புறங்கொடுத்துவெய்யோனேடி வந்திவிற்றாங்
காமல்வஞ்சத்தாலே, நல்லவரைவெல்லவெண்ணிவிடிந்தபின்புநாட்
டாரைக்கொல்லாமல்நீயும்நாதும், ஒல்லைவேறிடங்தனிற்போர்செய்
வோம்வாவென் றொருவன்பாற்சொல்லீவிட அதனைக்கேட்டு, வெல்
லுமிவர்போர்க்களத்தில்வீரமாக மேவினர்பொய்யகன்றநாவினரே.

க. கண்ணிகள்-இராகம்-மத்தியமாவர்தி - திரிபுடதாளம்.

க. தஞ்சுற்றத்தாரறி யாமல்வாள்பலகை
காய்கினர் அங்கு நீங்கினர் சொடி
நஞ்சொத்தவதிரூரன் சொல்லிவிட்டவிடத்தில்
நண்ணினர் ஞானக் கணைனினர்.

உ. அதிரூரனிவர்மீதிட் டவரைக்கொல்லாரென்ப
தறிந்திட்டான் வஞ்சஞ் செறிந்திட்டான் அம்
புதாறுதரித்தறி யாதநெற்றியில்நீறு
பூசினன் மன மாசினன்.

கூ. திடங்கொள்வாள்பிடித்துக்கே டகத்தால்நெற்றியைமூடிச்
சேர்ந்திட்டான் தீமை யோர்ந்திட்டான் வெற்றி
மடங்கல்யானையைப்பார்த்து நின்றார்போல்நின்றவர்முன்
வந்திட்டான் நெஞ்சு வந்திட்டான.

ச. நண்ணலுமேனாதி நாதாவனைக்கொலல
நாடினர் முன்பு கூடினர் அப்போ
தெண்ணித்தன்னெற்றியை மூடும்பலகைதன்ன
யெடுத்திட்டான் புன்மை அடுத்திட்டான்.

ரு. பதகன்றனெற்றியில் திருநீறுதனையன்பர்
பார்த்திட்டார் கோபம் தீர்த்திட்டார் முன்னம்

இதையிவர்மேற்காணேன் இப்போதுநீற்றைக்கண்
டேனென்றார் மேன்மை தானென்றார்.

கூ. இடத்திற்பெண் வைத்தவர்க் கன்பர்குறிப்படிநிற்
பேனென்றார் இனி நானென்றார் வாளை
விடுத்தால்நிராயுதரைக் கொன்றுசென்றபகீர்த்தி
விளையுமே யிவர்கெஞ் சுளையுமே.

எ. என்றெண்ணிப்பலகைவாள் கொண்டெதிர்த்திவர்போல
எதிர்ந்திட்டார் இன்பம் முதிர்ந்திட்டார் எவர்
அன்றன்பர்திருவுள்ளம் அறிவாரதிரூரனார்
அடுத்திட்டான் எண்ணம் முடித்திட்டான்.

அ. மாதேவரிவர்கருத் தறிந்தருள்செயவெளி
வந்திட்டார் இன்பம் தந்திட்டார் அக்கப்
பாதகன்வாளிரு விவர்பாசமறுத்தருள்
பண்ணினர் ஆள நண்ணினர்.

கூ. அங்கன்பரெக்காளுக் கலம்பப்பிரியாவின்பம்
அருளினர் கண்டத் திருளினர் என்றும்
புங்கவர்தொழும்பொன்னம் பலத்துக்கெழுந்தருளிப்
போயினர் முத்த லாயினர்.

ச - விருத்தம்.

தூயசீர்த்திருநீற்றிற்றுலங்குமன்
பாயவேனதிநாதரடிபணிந்
தேயுங்காளத்தியீசர்க்குக்கண்ணப்ப
நாயனர்செய்பணியைநவிலுவாம்.

எனதிநாதநாயனார் புராணமுற்றிற்று.

ஆ - திருவிருத்தம் ; அஉ - கீர்த்தனம் - நுசு - கண்ணிகள் - கசு.

திருச்சிற்றம்பலம்.

கo - வது. கண்ணப்பநாயனுர்புராணம்.

க-விருத்தம்.

திருச்சோற்றுண்டைநன்னுட்டிம் நிருக்காளத்திமலைக்கருகா
யிருக்குமுடிப்பூரினில்வேடர்க்கிறையாம்நாகன்மனையாளரம்
மருக்கொள்கோதைத்தத்தைதன்பால்வடிவேலவன்றனைநுளிலவ
தரித்தார்திண்ணனெனும்பேர் தரித்தாரெனையாதரித்தாரே.

க- கீர்த்தனம் - ஸ்ரீராகம் - ரூபகதாளம்.

பல்லவி

தத்தையிடத்து நித்தமைந்தர் தம்மைத்திண்ணனென்றழைத்தாள்.

அநுபல்லவி.

கைத்தலமெலுமலரின்மேலே களித்துத்தாங்க அருமையாலே(தத்)

சரணங்கள்,

க. காந்தலதரில் லாமற்பலநாள்
கருத்தினில்த்துயர் நண்ணி யெனை
ஆதரித்திடு முருகேசனை
அகத்தினில் நித மெண்ணி
நிதில்லாத பெருமையில உயர்
நிருவிழாச்செய்யப் பெருமானில்
நீதிமார்கள் தொழ வரு மயில்
வேலவனருளா லருமையில் (தத்தை)

உ. முத்துமணியும் விரியுடுக்கை
முழங்கிவேட சார்க்க வுண்டார்
உத்தமத்தர் துயிமுழக்கி
உயர்மலர் மழை தூர்க்க
மெத்தகு ம்புவி மேலே னசவம்
விளக்கிடப்பரி வாலே
தத்திமலைக் கடலின்பாலே
சந்திரன்வந்துதித்தல் போலே. (தத்தை)

கூ. உலகில்வேடர் குலத்தைவிளக்க
உதித்தமைந்தரைக் கண்டான் குரு

மலையொருகரு மேகத்தையேந்தும்
வகைபோலணைத்துக்கொண்டான்
குலவியபெரும் யோகன் என்னுங்
குறிகண்டெழுமுற் சர்கன்
நலமாய்ப்புள கித்த தேகன்
நாளுமகிழ்வுபெருகும் நாகன். (தத்தை)

உ- விருத்தம்.

திரும்கர்க்குவிற்பிடிக்கும்பருவஞ்சேரச் சிறப்பாகத்தன்குருவையய
மைத்துநாகன், வரிவில்பிடிப்பிக்கவந்தவித்தையெல்லா மைந்தர்கற்
றுப்பதினுமுண்டைந்தகாலை, விரவியமூப்பால்நாகன்வேட்டை
செய்யா விதத்தினைல்மிருகஞ்செய்கொடுமைகண்டுள், உருகிவேடர்
கள்வந்துசொல்லநாகன் யோசிப்பானிதுசொல்லநேசிப்பானே.

க - கண்ணிகள் - இராகம் - கன்னியாசி - மி - சாபுதாளம்.

க. முன்போலவனத்தினில் வேட்டையாடவென்னல்
முடியாது மூப்பினு னிளமேலே நீங்கள்
என்போலென்மகனையுங் கருக்கு நாதனுக்கொள்ளும்
என்றுரைத்தானகன் பரிவாலே.

உ. இரங்கிப்பின்மகிழ்ந்துவே டர்கள்தாழ்ந்துன்சிலைக்கிழ்
இனிதாகவிருந்தோம் நெடுநாளாய்ச் சொன்ன
வரம்பின்படியேயிற்போந் திண்ணனை யழைத்துங்கள்
வரையாகூயருள் செய்வாய் தடந்தோளாய்.

கூ. என்னலும்நாகன்மைந் தனைவரச்சொல்லிவிட்
டெழிற்காட்டில் வேட்டைக்கு மகன்போக அங்கே
மன்னும்பலிகொடுக்கத் தேவராட்டிதன்னை
மகிழ்வுடனேவினன் விரைவாக.

ச. மகனுர்வந்தப்போது வணங்கநாகன்பார்த்து
மகிமையாய் நீயிந்த வரையாகூி செய்து
மிகும்வேடர்களைக்காத்து வேட்டையாடிக்குல்
விருத்திசெய்குவதெனக் குயர்காகூி.

ரு. என்றுவாழ்த்திநாகன் உடைதோலுமுடைவாளும்
எடுத்துக்கொடுக்கத்திண்ண னுர்வாங்கிக் கொள்ள
நன்றிகொள்ப்ரத்தினிற் சிந்தைகொள் மைந்தர்க்கு
நாகனுமிதுசொல்வான் மகிழ்வோங்கி.

கூ. நமதுகுலத்தினுரை நான்காத்தினுமேலாய்
நாளுங்காத்துப்பகை வெல்லென்றான் மேன்மை
அமையும்வேட்டைவாய்க்கும் வேடர்களொடும்வேட்டை
ஆடினைந்தான் செல்லென்றான்.

கூ - விருத்தம்.

தந்தையிடத்தில் விடைகொண்டு தயரதருஞ்சுணையாடி
வந்துமனையினிராத்திரியில் வைகிவிடிந்தபின்னெழுந்தே
உந்தும்வனத்தில்வேட்டைசெய வோங்கும்வேட்புடைசூழச்
சிந்தைமகிழ்ந்துவில்லெடுத்துச் செழுந்தார்மார்பரெழுந்தாரே.

உ - கீர்த்தனம்- இராகம் - தோடி - ச - ஏகதாளம்.

பல்லவி.

எழுந்தாய்வேட்டைபுரியப் பொழிந்தார்மலரைவேடர்
மொழிந்தார்மங்கலவுரையே.

அநுபல்லவி.

எழுந்தார்பவக்கடலில் அழுந்தார் மலரினெடி
கொழுந்தார்நிடத்தொடுத்தசெழுந்தார்புனை திண்ணனார் (எழுந்)

சரணங்கள்.

க. மூடியில்அணிந்தமாலை யிடையில்மயில்தோகையும்
வடிவாம்செற்றியில்முத்தி னெடுகுன்றிமணி கோத்த
கெடுமயிர்க்கயிறுந்தங் கிடச்சங்கக்குழை தூண்டி
சுடர்மணியக்கு மணியும் கோத்திடையில்
படர்பன்றிக்கொம்புமணியும் பதக்கத்தொடி
மிலாட்டுந்தங்கமணி மாலைகள்தாழ
விளங்குதோள்வலய மின்னெளிருழை
இடைசேர்மரவுரி உடைமேற்சுரிகையை
உடைதோலொடுக் கட்டி சிங்கக்குட்டி
போலக் கிட்டி அதட்டி. (எழுந்)

உ. வாரிற்கச்சையிறுக்கி வீரக்கழற் பதத்தில்
சோரத்தொடுசெருப்பும் சூரச்சிலையைச் சூழ்ந்து
கோரப்பணிக்கெடுத்துப் பாரச்சிலோகர் தொழுலி
நிரத்துடனே வழங்க வேடருப
சாரத்துநிகள் முழங்க அப்போதினில்
தீருற்றவனெதெய்வ மிழ்பலிபோட்டு

தேவராட்டிவந்து வாழ்த்திடக்கேட்டு
காருற்றமுகிலகங் காரத்துடன்சிலையைப்
பாரிலுற்றிருக்காலே காரத்தின்மேலே
எடுத்தல் போலே முன்னுலே (எழுந்)

கூ. கிட்டிக்கரத்திற்சிலே தொட்டுக்கயிறு பற்றித்
துட்டநாய்களைச்சூழ விட்டிப்பவ வலையின்
கட்டறுத்தார்முன்வலைக் கட்டுக்களை யெடுத்து
கட்டமாடு மவரை ஒருகண்ணால்
திட்டமாக்காணுமிவரை வேடரெல்லாம்
இட்டமாகப்பல கண்கொண்டுபார்க்க
இலங்கும்பம்பைதுடி கொம்புகளார்க்க
மட்டிலாமிருகங் கட்டமேபுரியப்
பட்டசெயலையழிக்கத் துயரையொழிக்க
எவரும்பிழைக்கச் செழிக்க (எழுந்)

ச - விருத்தம்.

கடலிலடையும்நிலாபோலக்காட்டில்வேடச்சேனையொடுங்
திடமாமைந்தரெழுந்தேகச்சிலபோர்விலங்கினடிபிடித்து
வடிவாய்வலையோரோசூனக்குவலாத்தித்திண்ணனர்க்கியம்பச்
சுடுவாளிகளாமழைபோலச்சொரிவார்வேட்டைபுரிவாரே.

கூ- கீர்த்தனம் - இராகம் - நாதநாமக்கிரியை-மி - சாபுதாளம்.

பல்லவி.

வேட்டைசெய்தாரே திண்ணனார் வேட்டைசெய்தாரே.

அநுபல்லவி.

வேட்டைசெய்தார்பெருங் காட்டில்விரைக்தொரு
கோட்டைபோலவே வலையைக்கட்டிக்
கூட்டமிருகங்க ளழியக்கிட்டி. (வேட்டை)

சரணங்கள்.

க. துய்யதிண்ணனாரும் மையுடல்வேட சொடு
செய்யகாட்டினிற்சென்று வெய்யநாய்களைவிட்டுக்
கையிற்சிலைவளைத்துப் பெய்யுமேகம் போலே
கொய்யும்படிக்குமிக எய்யுங்கணைக ளாலே
கோட்டையாய்த்தடுத்தார் அதற்குள்ளாகக்
கூட்டமா யடுத்தார் வேடரெல்லாம்

கொம்பும்உடுக்குகளும் பம்பையும்தாரையும்
பம்புஞ்சிறுபறையும் அம்பரம் போலவே
படியினில் தொனிக்க அப்போதினில்
இடர்மிகச் செனிக்க அங்கிருந்த
ஏனமுங்கரடியும் மானினமும் புலியும்
கானவருமைகளும் யானையின்கூட்டமும்
கலங்கதிர்ந்தனவே மனத்தினில்
சல முருக்கினவே அதைக்கண்டி
தாங்கிடாதகின மோங்கியெழுந்திட
ஆங்குகனைவிடச் சலித்திடாமல்
நீங்கமிருங்கள் தனைவிடாமல்(வேட்டை)

உ. வேல்கொண்டவேடர்தம் கோல்வந்து படும்போது
கால்துண்டுபடும்யானை வால்துண்டு படுமான்கள்
தோல்துண்டுபடும்பன்றி ருல்துண்டுபடு மேதி
மால்கொண்டதுயரமே மேல்கொண்டிடப்புலிகள்
மடிந்தனவிலவே கலையைப்பல்லால்
கடிந்தனவிலவே வலிமையான
கரியபெரியமலை வரியில்லெடுத்தகொத்த
பெரியதிண்ணார்களை கரியொடு திங்கத்தின
பெருமுடலுருவும் அதனைப்பகல்
இரவொடுமருவும் செய்கைபோலாக
இருவினைவலையிடைத் திரிபவர் தன்னெறி
மருவும்போதவர்நெஞ்சை மருவுறத்தடைசெய்யும்
வன்புலன்போலே வலியினைமான்
தன்பெலத்காலே திரித்துவெளிச
சாரும்போதில்நாய்கள் கோவந்துபிடித்திட
வீரமான்புலி காடி கடிபன்றி
கோரமாகிய எருமைவிழ வென்றி.(வேட்டை)

ஊ. வெற்றிகெடுங்கணையாற் றுற்றபிருகமெல்லாம்
அற்றிடவீசி யற்றிட ஒருபன்றி
கொற்றமாகச்சினம் பற்றிக்கரு மலைபோல்
சுற்றிவருவலே இற்றிடப் பாய்ந்திரு
துண்டாகக்கிழித்து இடிபோலோசை
உண்டாகத்தெறித்து விசையாகவே

ஓடும்பொழுதில்நாணன் காடனென்றிருவரும்
வேடர்க்கரசரொடுங் கூடத்தொடர் அதி
விசையாக ஓடிப் பன்றியுடல்
மிசைசேர் காடிப் பாணங்களை
விட்டபோதில்வந்து பட்டிடாமலொதுங்கி
எட்டியொருமலைமுன் கிட்டிமரச் சூழலில்
ஏகிடத் தொடர்ந்து உடைவாள் கொண்டு
வேகமாய் கடந்து வராகத்தை
வீறிட்டலறிவிரு கூறிட்டிடஇழியிர்
மாறியெயிற்ற மண்ணில் விழுந்திட
ஆறுசூடிமே லெண்ண மெழுந்திட(வேட்டை)

இ - விருத்தம்.

திண்ணனுர்பன்றியைமாய்த்திடலுகாம்பலகாதஞ்சோந்திசோத்தும் நண்ணியேவதைத்தானென் றறிசயித்தக்காடலும்நாணலுக்காழ்ந் தேத்தி, யுண்ணலேபசிமிகுந்திதைக்காய்ச்சித்தின்றிரேருந்திவே ட்டை, பண்ணைநாங்கானகத்திறையப் பேரவோமெனலும்பகர்கின் றரோ.

உ - கண்ணிகள் - இராகம் - மோகனம் - ஆதிதாளம்.

க. உண்ணீரெங் கென்று திண்ணனுர்மகிழ்ந்
தோதலுமிருக்கத் தேக்கின்புறத்தின்று
நண்ணில்மலைக்கப் பாலே சொன்னமுகலி
நதியுண்டென்றுணன்பரிவாலே.

உ. இந்தப்பன்றியைக் கூடக் கொண்டுவாருமென்
றேகியசைக்காதஞ்சென்றருள் நீட
வந்தரன்மகிழ்வு கொண்டு வாழுங்திரு
மலைச்சாரற்சோலையி லிவர்கண்டி.

ங. திடமான பெருவரையில் போவோமெனலும்
திகழுஞ்சிகாளத்திற் திருவரையில்
குடுமித்தேவர் நல்ல அழகாயுற்றார்
கும்பிடலாமென்று நாணன்சொல்ல.

ச. பரிந்துமலையைக் கண்டு சேரச்சேரவென்
பாரம்போவதென்றுசைமேல்கொண்டி
விரிந்திடன்பர் சென்றார் சீசொன்னதேவர்
விளங்குமிடத்தில்காணுபோவென்றார்.

கூ - விருத்தம்.

திண்ணருமிப்படியேயித் திடமிருவிருவர்தொடர்ந்து
கண்ணவிரைந்துகடந்து கன்முகலிக்கரைசேர்ந்தோர்
தண்ணிழல்தன்னில்வராகந் தன்னெடு காடனைவைத்தி
புண்ணியமலிமிசையேறிப் புகரைதரிந்தார்.

சு - கீர்த்தனம் - இராகம் - எதுகுலகாம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

பரம்னுரைக்கண்ணும் கண்டாரே நீர்
பாவசம் கொண்டாரே.

அனுபல்லவி.

அணியில்த்தீவளர்ப்பா னெனக்காடனுக்குச்சொல்லி
அரியபொன்முகரி ஆறுதினைக்கடந்து
பெரியதானமலைச் சாரலில் நடந்து. (பரம)

சரணங்கள்.

க. பகலிற் கடல்முழக்கம் போலேமலையுச்சியில்
பஞ்சதுந்துபி மோத இதுகன்னவென்று
பத்தர்கேட்கலும்நாணன் மலைத்தேனிலாமொய்த்துப்
படசொலியென வோத இவர்முன்செய்த
தருதவத்தாலன்பு தெரிசத்தினிம் பெருகத்
தங்குமலையைநோக்கி யென்பும் உள்ளும் உருகத்
தத்துவப்படி மேலே கடந்துநி
வத்தையடைவர் போலே திருக்கா
ளத்திமலைப்படியை விரைவினில்த் தாண்டி
உத்தமமானகண் அப்பிட வேண்டிப் (பரம)

உ. இவரீசரைக்காணுமுன் புவனேசர்திருவருள்
இசையுங்கண்ணால் நோக்கப் பலவிலங்காம்
இழிவினைநீக்கியே சோதிமயமாமினை
யில்லா அன்புரு வாக்க இவர்க்குமனத்
துவகையளவில்லாமல் பெருகிட்டே துங்க
உள்ளத்தன்னிலன்பாம் வெள்ளமெழுந்துபொங்க
ஓடிவிரைந்து சென்றார் சென்றருகில்
நாடித்தழுவி நின்றார் மோகமே

கூடிடவேயுச்சி மோந்து விடாமல்
நீடுமின்பக்கடலை நீந்தப் படாமல் (பரம)

கூ. கரசரணதியங்கம் எங்கும்புளகம்பொங்கக்
கண்ணீர்தும்பிப்பொழிய இவனெனக்கும்
காணப்பட்டானிதென்ன அதிசயமென்றன்பு
கசிந்துகசிந்து வழியக கொலைத்தொழிலைப்
புரியுங்கொடியவேட்டச் சாதியார் போலச்சிங்கம்
புலிவராகங்கர டிகள்பல மாதங்கம்
பொருந்துமனத்தின் மீதே இக்கமலையில்
பெருந்துணையுமில் லாதே தனிமையாய்
இருந்தென்னைனைகொக் கடிபிரியாமல்
பரிந்துகைச்சிலைவிழுங் கதுந்தெரியாமல் (பரம)

எ - விருத்தம்.

அப்பொழுதுபசசிலையும்பூவும்நீரும் ஐயர்தமக்களித்தவரா சென்
றேதிண்ணர், செப்பிடவுன்தந்தையொடுபண்டிவேட்டைசெய்திங்கு
வந்தோமப்பொழுதோர்பார்ப்பான், இப்படிசெய்தானவனைசெய்
ததாகும் எனநாணன்சொலஅன்பரினியசெய்கை, ஒப்புயர்வில்நாத
னுர்க்கிதுவாமென்றே யோர்ந்தின்ருர்அமுதாக்கச்சேர்ந்தாரே.

ஏ - கீர்த்தனம் - இராகம் - மூகாரி - ஆதிதாளம்.

பல்லவி.

திருவமுதுகொண்டெழப் பரிவாய்நடந்தார். (திருவ)

அனுபல்லவி.

வரிவில்லியெடுத்துப்பன்றி மருவியஇடத்தைநோக்கித் (திருவ)

சரணங்கள்.

க. இவரைநான்கண்டபிறகும் இவரைத்தனியாகவேவைத்
திவரைப்பிரிந்திட மனம் இல்லையென்பார் ஆலில்
இவருக்கிறைச்சியிடுவார் எவருமில்லையென நைந்து
தவமுனிவர்தொழுமலை கனைவிட்டிறங்கிவி ரைந்து (திருவ)

உ. போவர்திரும்புவர்பின்னும் ஆவலாய்ப்புல்லுவர் மீள
மேவுவர்திரும்பிப்பார்ப்பர் இனங்கன்றைப் பிரியும்
ஆவெனவேருழுவரின்ப மாவருதுசெய்ய வின்று
தேவரீர்கினைச்சிகொண்டு தோவருதேனென்று (திருவ)

ஈ. ஆருறவாய் நீரிங்கிருப் பிரென அகலமாட்டேன்
நீர்பசித்திருக்கக்கண்டும் நிற்கமாட்டேன் என்று

சிரிதிகழ்வானவைத்தெங்குருஞ்சேரார்போலேமுக்கண்ணனூர்
நேரிறையமாட்டாம்பக்கண் ணீர்சொரியவே திண்ணனூர்(திருவ)

அ - விருத்தம்.

நேயனூர்கமைத்தொழுதுமால்வரையினைநீங்கித்
தாயசிந்தையேயெழுருதொழிலினுந்தொடராமல்
மாயனுரியாதவர்மதிழுனைமைக்க
காயனூர்விரைந்தேகினூர்காணலுந்தொடர.

கூ - கண்ணிகள் - இராகம் - கல்யாணி - சம்பை - தாளம்.

க. திண்ணனூர் பொன்முகமிக் கரையில்வரக்காடனெதிர்
சென்றடிபணிந்து நின்றனன் அரசரிகளடைந்
தென்னம்போற்பன்றியை அரிந்துனவுக்தேன்றீங்கனிவர
இக்தனேபோதென்னவென்றனன்.

உ. அங்குரானனுங்கேட்டுத் திண்ணன்மலைத்தேவரைக்கண்
டனைத்துமிழ்ந்தடிமைப் பட்டான் பிடித்துக்கொண்டி
லங்கினேனிடாத வுடும் பென்னைவேரீங்காமல்
மறவர்குலத்தலைமை விட்டான்.

ங. இன்னமந்தத்தேவர்தின்ன இறைச்சிகொண்டுபோகவந்தான்
என்றநானனையும் நோக்கார் உனக்கிப்போ
தென்னபித்துப்பிடித்ததெங்கள் முன்னரசர் போலிலேநீ
எனுமவன்மேல்மனத்தைப்போக்கார்.

ச. வனமதையெரிதன்னில் வாட்டிநல்லதசையெல்லாம்
எடுத்தம்பிற்கோத்துக் கொண்டு காய்ச்சிருசி
யனையபிற்கிடவாயால் அதுக்கியிளையதைத்தொன்னையில்
உமிழுந்திண்ணனுமைக் கண்டு.

ஞ. கல்லதிறைச்சியைத்தொன்னை தனிலுமிழ்ந்து மற்றதனை
நமக்குங்கொடுக்காம லெறிக்தான் திண்ணனுக்கு
வல்லபசியிருந்தாலும் ஒருபேச்சும்பேசிடான்
மனத்தன்னில்மயக்கஞ் செறிந்தான்.

சு. திண்ணன்கொண்டதெய்வப்பயித் தியக்கியக்காகனெறி
தேவராட்டியையுஞ் சேர்த்துக் கொண்டுநாம்
கண்ணுவோமெனவேட்டைக் காரரைக்கொண்டிருவர்களும்
நடந்தார்தம்மூரைப் பார்த்து.

எ. இருவர்போனதுமறியார் ஈசர்க்குமஞ்சனஞ்செய்ய
எண்ணினதினீரைத் தூய வாயினிற்கொண்
டனியபள்ளித்தாமத்தைக் கலையினிற்சுமந்துகொண்
டன்புமனந்தன்னில்க் தோய.

அ. தனுவொருகைபிடித்தான்கொள்தேக்கிலைக்தொன்னையொரு
தாங்கியேயந்தி வண்ணனூர் பசியினல் (கை
கனியாகவருந்துவரென் றிரங்கிக்கன்றினைப்பிரிக்க
தாயெனச்சென்றார்திண்ணனூர்.

கூ - விருத்தம்.

பொன்முகலியின்கரைகடைந்துபோயினூர்
நன்மைசேர்திருமலை மீதுநண்ணினூர்
மன்மதனெரித்திட மிழிந்து நோக்கிய
கின்மலர்க்கூனமுதூட்டநோக்கினர்.

சு - கீர்த்தனம் - இராகம் - தானந்தைரவி - ஆதிதாளம்.
பல்லவி.

திருவமுதூட்டினூர் திண்ணனூர் (திருவ)

அனுபல்லவி.

இருவராலுமறியா ஒருவரானவர்க்குத். (திருவ)

சரணங்கள்.

க. நாதாநீதாதா வென்று பரிவினெடு
நாயகாமுனஞ்செவ்வு முடிமலைப்
பாதச்செருப்பால்விழுவுட்டி உள்ளன்பைப்
பரிந்துமிழ்வார்போல்வாயின் றிருமஞ்சனநீராட்டித் (திருவ)

உ. சிரங்கொண்டமலர்ப் போது தன்னையையர்
திருச்சடைமுடி மீது வனைங்கிசாத்தி
இரங்கிவாயாலே சுவைத்துப் பதம்பார்த்த
இதமானவனமுதை எதிராகவே வைத்துத் (திருவ)

ங. செழித்ததசையைக் கூட்டிக் கனையிற்கோத்துத்
தீயிற்பதமாய் வாட்டிப் பல்லாலதுக்கி
வழுத்தும்காவாவினிமைதெரிந்து கொண்டுவந்தேன்
வரதசேயமுதுசெய் தருளுமெனப் பரிந்து (திருவ)

கூ - விருத்தம்.

முன்புகின்றமதுரமொழிமொழிந்தானமுதுசெய்வித்தார்
பின்புமீசர்க்கமுதூட்டப்பெருகிப்பெருகியெழுந்தோங்கும்

அன்புநிறைந்தார் அக்காலத்தாதித்தனுமேல்கடல்புருந்தான்
என்பிராணைக்காத்துக்கொண்டிருந்தார்நிங்குபொருந்தாரே.

எ - கீர்த்தனம் - இராகம் - லலிதா - மி - சாபுதாளம்.

பல்லவி.

காத்துக்கொண்டிருந்தாரே இரவெல்லாம் (காத்து)

அனுபல்லவி.

ஏத்துமடியுங்கி தூத்த அரிமுதல்
வாய்த்தஅமரரைக் காத்தருள்பரனைக் (காத்து)

சரணங்கள்.

க. கட்டழகுபெறு நிஷ்டையன்பரும்
மட்டிலாதுறை துஷ்டமிருகங்கள்
கிட்டுமெனப்பயப் பட்டிருவியும்
கொட்டிடாமலே அஷ்டமூர்த்தியைக் (காத்து)

உ. விண்ணிலுறைகரு வண்ணமேகமும்
மண்ணுலகின்மிசை கண்ணிச்சிலைகொண்ட
வண்ணமெனநின்று கின்னரருயர்
புண்ணியப்பொருளைக் கண்ணெனினமையெனக். (காத்து)

கூ. அருந்தவருமம அருந்தடவரையில்
விரிந்தவனத்தினிற் பொருந்தித்தவம்பல
புரிந்துக்காணரும் பரம்பொருளைநெஞ்சில்
பரிந்தன்பொடுந் தெரிந்துகோன்று. (காத்து)

கக - விருத்தம்.

இரவுவிடியஅன்பர்பணிந்திசர்க்கமுமூட்டிடஉருவம்
தெரியுமுனமேவேட்டைசெயச்சென்றார்மிருகங்களையிவருக்
குரியவிரவிகாட்டுதல்போல் உதித்தான் இப்பாலாயிவகோ
சரியாசரன்முன்னடைந்துசுத்திசமைத்தார்பூசைஅமைத்தாரே.

அ - கீர்த்தனம் - இராகம் - பைரவி - திரிபுடதாளம்.

பல்லவி.

சிவகோசரியாசெனுமுலிவர்வந்து சிவபூசனைசெய்தார்.

அனுபல்லவி.

தவயிலாஅன்பர்க் கருளநேசிக்கும்
கம்பிரான்றனை நிதமும்பூசிக்கும் (சிவகோ)

சரணங்கள்.

க. புனல்மலர்முதலான வகைகள்கொண்டுசர்முன்
தினமும்போல்வரும் போது சங்கியில்
பொருந்துமிறைச்சியையுமனுமைபங்கண்டோடி
வருந்தியிந்தத் தீது
னைவேடரேசெய்வார் ஈசனேயிப் படித்
திருமுன்புபுரிந்தவர் தப்பிப்போகும்படி
இனியதிரு வுள்ளம் கொண்டதென்
னைக்கண்ணீர் வெள்ளம் பொழிந்திட
மனமயங்கியுடல் சோர்ந்திட விழுந்து
வருந்தியினிச்செய்வ தென்னெனவழுந்து (சிவகோ)

உ. இரங்கியிருப்பதனும் பூசைக்குத்தாமதம்
பொருந்துமென்று சாற்றி எலும்பினுடன்
இலையும்இறைச்சியுமாயடியுஞ்செருப்படியும்
விலகஅலகால் மாற்றி
மருங்கிலோடிருசொர்ண முகலியாறுதனில்
வந்துமூழ்கித்திரு நீறிட்டுவிரைவினில்
பெருங்கிரியில் வந்து நாயகர்
பொருந்திடம்பு குந்து திருமுன்பு
நெருங்கும் அனுசிதம் நீக்கவேயெண்ணி
நிறையும்பரிசுத்த மாகவேபண்ணிச் (சிவகோ)

கூ. திருவளர்ந்திடுசிவ பூசைக்குக்கருதியாய்
வருமுப கரணங்கள் வேண்டுவதெல்லாம்
திகழ்ந்திடவேகொண்டு வந்துவணங்கிஞர்
புகழ்ந்தையாசரணங்கள்
அரியதிருக்காளத்தி வரையில்வாழ்தனிமுதல்
அனுபரமனுர்க்குத் திருமஞ்சன முதல்
மருவிடும் பெரிய பூசையில்
பரிவுகொண்ட னிய கலஞ்சேர்
பெரியயுகமக் தெரியவேசொன்ன
பெற்றிபோல்மகிழ் வுற்றுநலத்துன்னச் (சிவகோ)

கஉ - விருத்தம்.

தகுந்தபூசைசெய்துபெருந்தவருந்தவஞ்செய்வலஞ்சேர்ந்தார்
புகுந்துவனத்தில்வேட்டைசெய்யும்புனிதர்மிருகங்களைவதைசெய்

துகந்தகசையையமுதாக்கியடையார்திருமுன்சேர்ந்தலம்
மிகுஞ்சபரிசயல்அமுதுதுகர்விப்பார்நியமந்தப்பாரே.

கo - கீர்த்தனம்- இராகம் - கமாசு - ரூபகதாளம்.

பல்லவி.

மிருகண்டனுமு தரனருக்களித்தார் சிங்தைகளித்தார் (திருஞ)

அநுபல்லவி.

விரைவில்வேட்டை புரிந்து கொன்ற
மிருகத்தின்கசை அரிந்து செய்த (திருஞ)

சரணங்கள்.

க. அரிக்கொழுப்புக் தன்னைக் காய்ச்சி
அழகாம்இலைத் தொன்னை தனில்
பரிந்துவைத்துக்தேன் பிழிந்து நலம்
பொருந்துமொழிகள் மொழிந்து தொண்டர்(திருஞ)

உ. மருமலருமம்ஞ சனமும் கொண்டு
வருகாகலும் மனமும் பொகுகப்
பரனுக்குமுன்போற் பூசை செய்து
விரைவிற்கொள்ளுமென் முசை நிகத்(திருஞ)

க. தேவருக்கவி கொடுக்கத் தியில்
சேர்த்தல்போல்கலம் அடிக்க மகா
தேவருக்கெனக் கொணர்க்து தம்
காவினற்பதம் உணர்க்து செய்க(திருஞ)

ச. ஞால அன்பரும் பின்று நேற்றை
நாளினும்இது கன்று நாவால்
தானும்இனிமை பார்த்தேன் கொம்புத்
தேனையும்விட்டுச் சேர்த்தேன் என்று(திருஞ)

கக. - விருத்தம்.

செப்பரியதிருவமுதுசெய்வித்தருளுகையுங்
கிப்பரிசாய்ப்பூசனைசெய்கிறவெல்லாமுறைங்காமல்
மெய்ப்பரிவாய்ப்பகலெல்லாம்வேட்டைசெய்துதிண்ணனார்
ஒப்பரியவழிபாட்டினுவந்தமையுமக்காளில்.

ச - கண்ணிகள் - இராகம் - குறிஞ்சி - மி - சாபுதாளம்.

க. நாமும்இவர்செயலைக் காடன்னனைன்னும்
வேடர்கள்போய்ஏக வேடுரைக்க நாகன்

வாடித்தேவராட்டியைக் கூடஅழைத்துக்கொண்டு
தேடித்திண்ணனார்முன் ஓடிவந்து.

உ. கட்டானபுரத்தினைச் சுட்டார்தம்மேலன்பு
முட்டாஅன்பரைப்பேதிக் திட்டாலும் கங்கள்
மட்டானகுறிப்படி கிட்டாதசெயலைக்கண்
டொட்டாமல்அவருங்கை விட்டாரே.

க. பெண்ணிடங்கொண்டவர் தண்ணருளாவிரும்பின்
வண்ணம்பொன்னிறமான வண்ணம்போல் அன்பால்
புண்ணியவடிவாகி அண்ணலும்மும்மலம்விட்ட
திண்ணனார்வேடர்பால் நண்ணுவரோ.

ச. நேசமறிந்தபடி ஈசனைப்பரிவொடு
பூசனைசெயச்சிவ கோசரியார் இது
மாசனவேளைக்கித் தேசுறும்பூசனை
யுசைமனத்தின்மிக வேசெய்தார்.

ரு. வாளுட்பணியுமிங் கூனுடலும்புவைத்துக்
கானேகும்அவனைக்கா ணேனேன பெரு
மானேஉமையவள் கோனேயிதைத்தீசென்று
ஞானகரமுனிவர் போனரே.

கச - விருத்தம்.

புவனேசன்முன்இவ்விதமாய்ப்புகன்றமுனிவரன்றெரிந்
தவநேசங்கொள்வனஞ்சேர்ந்தார் தமக்கனமுதுபரிந்தாட்டும்
இவர்நேசத்தைவெளிப்படுத்த எம்பிரானுரவ்விரவில்
சிவகோசரியார்கனவினிடைச் சென்றுரார்செய்கின்றாரே.

கo - கீர்த்தனம் - இராகம் - சங்காராபரணம் - ஆதிதாளம்.

பல்லவி.

கனவில்நாதரருள் செய்தாரே கல்ல
கருணையென்னுமழைபெய்தாரே.

அநுபல்லவி.

வனவேடனென்றவனே நினையாதே யவன்
தனதுமேன்மையைச்சொல்வோம் முனிவனேகேளென்று. (கன)

சரணங்கள்.

க. அவன்வடிவெல்லாம்நம்பாற் செறியும் அன்பாம்
அவன்றிவெல்லாம்நமையே அறியும் அறிவாம்

அவன் செய்யுஞ்செயலெல்லாம் உலகையாரும் காண்
கவன்னிலையிதுகோளாய் கவருளியேயென்று(கனவில்)

உ. முடிமலர்க்கருஞ்செருப் பணிபதமே நமக்கு
வடிவாம்இனஞ்சேய்பதத்திலும் இதமே ஒரு
திடமாமுனிவன்காதால் விரிகங்கையிது மன்னி
ஐடனவன்வாயாலுமிழ்ந் திருந்தபுயமென்று(கனவில்)

ஊ. மலர்சோன்முதலோருச் சனம்பண்ணும் மலர்க்கும்
தலையாற்சாத்திமலர் புகழ்பண்ணும் நிலவில்
கலமாய்வெந்ததெனவென்று குலவருசிபார்த்தவன்
உலகோர்செய்அயிற்பாகத் திறுபுயர்வாமெனறு(கனவில்)

எ. முனிவர்சொல்வேதத்தின் அதிசயமாம் துதிக்கும்
முனமிருந்தவன்சொல்லு மொழிநயமாம் அதனால்
எனதிடைவைத்தவன் தனதன்பைக்காட்டவேம்
இனியொளித்திருந்தகண் னொளதையங் திரென்று(கனவில்)

கரு - விருத்தம்.

அருமுனிவர்க்கிவ்விதமாயருளிச்செல்லுமர்தையுணர்ந்தற்புதம
டைந்துமுனிவர்காமும், பருவியெழுவென்றும்போற்பரர்க்குப்பூசை
பண்ணிப்பின்பொளித்திருந்தானைந்தாம்நாளின், றிவகலமுனிவர்
வருமுன்னம்வேட்டைக் கெய்தியன்பரனலமுதமுகலாக்கொண்டு,
கருதிவரும்போதமலர்கண்ணிற்சோரி கண்டிட்டார்மிகுதயாளங்கொ
ண்டிட்டாரே.

கக - கீர்த்தனம் - இராகம் - காம்போஜி - ஆதிதாளம்.

பல்லவி.

நின்னனுருவிக வருந்தினர் யாரும்
சேவித்திடப் பொருந்தினர்.

அநுபல்லவி.

விண்ணவர்தொழுந்திருக் காளத்தியிக்களிக்கும்
விமலனருக்கன் அமுதபானிக் களிக்கும்(நின்னை)

சரணங்கள்.

க. ஆரும்நாவினில் வேடையாடியுன்
அமுதமெனுஞ்சனம்மலர்கொண்டு நாந்
தீதில்லாதவர்பரித் திருப்பதென்றுவருந்தினோ
தெரிவசருமானைதைக் கண்டு நின்று
மாறில்லாத ஐயர் தமக்கென்ன

வந்ததோவென்றுதுய்யர் வரலுமிவர்
தேறுமன்பைமுனிவர்க் கறிவிக்கமனங்கொண்டு
திருத்தமாம்ஒருகண்ணில் இரத்தங்காட்டிடக்கண்டு (நின்)

உ. தூரத்தில்வரும்போதே காதர்கண்ணினிரத்தம்
சொரியக்கண்டுவிரைந்துமுனஞ்சேர்ந்து வாயின்
நிரம்பவாலும்வில்லும் கலைமலருஞ்சுறை
நிலத்திற்பதறிவிழுந் துடல்சோர்ந்து எழுந்து
சோரியைத்துடைத் திடலும் நிற்காமலே
சொரியக்கண்டுள்ளும் உடலும் நடுநடுங்கி
யாரிதுசெய்வார்வேடர் செய்தாரோவென ஓடி
யெங்கும்பார்த்தும்மிருகங் களோடுங்கூறுமல்வாடித் (நின்)

ஊ. பாவியேன்கண்டதனல் மேவிஞர்பிரியாத
பரமனுர்க்குத்துன்பம் அடுத்ததுவோ அன்பர்க்
காவலர்தவருளுந் தேவதேவேயுமக்
கழியேன்செய்திடும் கலம்இதுவோ செய்ய
லாவதொன்றையுங் குறியேன் இகழ்கொடுமைசெய்
தாரையும்நான் அறியேன் உமக்கிது
மேவினதெவ்விதத்தா லெனச்சிக்கைபண்ணிப்பண்ணி
விலகும்படிக்குச்செய்யும்விதத்தினேயென்னியென்னித்(நி)

எ. வேடர்கள்கணபட்ட புண்ணைத்தீர்க்குமருந்தை
விரைவாகக்கொண்டிவருவேனென்று ஓடிக்
கூடுமினத்தையிட்ட காடேபோலவே யேக்கம்
கொண்டுமலையருகின்வனஞ் சென்று எங்கும்
தேடித்தேடிக் குறித்துப் பச்சிலைகளைச்
சிகிரமாய்ப் பறித்துக் கொண்டுவந்து
நாடியமலர்கண்ணில் நயமாய்க்கசக்கி வார்த்து
நன்றிசெய்தும்இரத்தம் நின்றிடாததைப்பார்த்துத் (நின்)

கக - விருத்தம்.

நின்னனுருவுநாந்தித்தெளிந்துதங்
கண்ணையோரம்பினற்களைந்தேயெடுத்
தண்ணலார்கண்ணில் அப்பலும்புண்ணினீர்
நண்ணிடானைமகண்டானந்தம்நண்ணினுர்.

கஉ-கீர்த்தனம் - இராகம் - சாந்தவி - சம்பைதாளம்.

பல்லவி.

கண்ணில்வருதருகிற்கக் கண்டார் திருக்(கண்ணில்)

அநுபல்லவி.

அண்ணல்திருக்காளத்தி அமலனுறலது. (கண்ணில்)

சரணங்கள்.

க. ஊனுக்கூன்இடுவதெனகண்ணி இவர்விழிக்கென்
ஒருவிழியையெடுத்துவைத்தார் சிவருமென்றெண்ணிக்
கானவருக்கரசராக் தாய்யர் தங்கண்வேங்
கண்ணையுமெடுத்துமனம் களித்துவைக்கலுயர்(கண்)

உ. குன்றுபோல்வளர்தோள்கள்தட்டிப் பாய்ந்தெழுந்து
கூத்தாடிக்கூத்தாடிக் கொண்டுகரங்கொட்டி
கன்றுகான்செய்தமறியென்று ஆனந்தம
கண்ணரியுன்மத்தர்போல்த் திண்ணன்றின்று(கண்)

கூ. மேவுமெனக்கினியென்ன காழ்வு உமதுகண்
வினைதீர்க்காறுமிதை விடவுண்டோ வாழ்வு
தேவரென்றுகண்ணீர் பொழிய ஆனந்தத்
திரைக்கடலில்மூழ்கிமுன்புபெருத்த தயாஒரியக்(கண்)

கள - விருத்தம்.

இன்பவாரியில்முழுகுந்நின்னைஞர்பொன்பின்னியல்பைக்காட்டப்
பின்பும்காயகரிடக்கண்ணினிலிரத்தக்காட்டிடலும்பெருமருந்து
முன்புதான்னைகண்டேனினியஞ்சேனென்றம்பைமுன்போற்கண்ணி
லன்பனுன்றிடலும்கம்பனர்தாயாமலருள்செய்வாரே.

கஉ- கீர்த்தனம் - இராகம்- பொது - மி - சாபுதாளம்.

பல்லவி.

கலனைப்பறில்லென நேசர்
கையினைப்பிடித்தார் ஈசர் கண்ணப்ப)

அநுபல்லவி.

உண்ணப்பரிவாகமக கூனமுதமிழ்ந்தாட்டும் (கண்ணப்ப)

சரணங்கள்.

க. எழில்சேர்கண்ணை யிடந்தப்பும் வேலை
இடந்தப்பும்மெனத் தம்மிடக் காலை
அழகர்கண்ணில்வைத்துத் தங்கண் மீதில்
அம்பையூன்றத் தொடங்கினை போதில்(கண்ணப்ப)

உ. தொடுக்கும்பாணத்தைக் கண்ணில் கட்டித்
தோண்டும்போதையர் கையால்த் தொட்டுத்

தடுக்குமுன்பு தடுக்கமேன் மேலே
தழைக்குமன்பொடு நாதர்வா யாலே(கண்ணப்ப)

கூ. கண்டசிவமோ சரியார் மகிழக்
கமலவேதன முதலோர் புகழ
அண்டர்பூவின் மாரி பொழிய
அருமறைகள் துதிகள் மொழியக(கண்ணப்ப)

கஅ - விருத்தம்.

கெடியபரனாகண்ணப்பநில்லென்றியம்பிக்கண்பறிக்க
அடையுங்கரத்தைப்பிடித்துகொண்டன்பனேயென்வலத்தில்
வடிவாயிறையாயெனஅருளவாழுமவர்தாள்பணிந்துபரி
வுடனேகலியனார்பெருமையுரைப்பேன்பவத்தைக்கரைப்பேனே.

கண்ணப்பநாயனார்புராணமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கoo-கீர்த்தனம் - கூகூ - கண்ணிகள்-உo.

திருச்சிற்றம்பலம்.

க

திருச்சிற்றம்பலம்.

க்க - வது. குங்கிலியக்கலையநாயனார்புராணம்.

க - விருத்தம்.

பொன்னிநாட்டிலத்திருக்கடவூரென்னுங்காப்பூசுரர்குலத்தில்
மன்னுங்கலையரென்னுமன்பருன்னும்பரமனர்மகிழத்
துன்னுங்குங்கிலியதூபம்மின்னும்படியேயிடுந்தொண்டு
பின்னம்பொருந்தாதியற்றிவரும்அன்னங்கலையிற்பிசகாரே.

க - கீர்த்தனம் - இராகம் - ஆபோ - ஆதிதாளம்.

பல்லவி

குங்கிலியதூபம் இடுவார் பவச
சங்கிலியைஒழித்து விடுவார்.

அநுபல்லவி.

மங்கலாத்தொண்டர்தம் வெங்கலிதனைநீக்கும்
மாசில்லாஅமிர்தக டேசர்முன் மணமாக்கும். (குங்கி)

சரணங்கள்.

க. அடியவர்அன்பைவெளிப் படுத்திட நினைந்தெங்கள்
அரனருளால் மன்னும் இல்லாமைவந்தும்
கெடியலெய்கோயும் அடிமையாலோயும்விற்றும்

நிதிகளைத்தும் பொன்னும் நீங்கியபின்பும்
வாடிவாய்முன்செய்யும்பணி தவறுமற்செய்திடலும்
மனைவிமக்களும் இன்னும் உள்ளாவர்களும்
கொடியவருக்கமனைத் தடையறஇரண்டினைம்
கூடும்சோகமின்றி வாடிடக்கண்ட பின்னும்(குங்கி)

உ. மனைவியுந்தாயையைக் கொடித்துநீரிதற்குநெல்
வாங்குமென்னனும் நீங்கிக் கடைத்தெருவில்
இனியவர்வரலரு ளுங்கிலியம்
இருக்கும்பொதியைத்தாங்கி எதிர்வரலும்
புனிதர்என்னெனக்கேட்க அவன்குங்கியமென்று
புகலுமமிழ் வோங்கி வேறொன்றுகொள்வ
தினியுண்டோவென்தாரி தனக்குநெல்வாங்காமல்
இந்மானருங்கிலியம் பொதியையன்புடன்வாங்கிக்(குங்கி)

கூ. மங்கலத்தாளிக்குக் குங்கிலியத்தைவாங்கி
மாறில்லா ஞானத்தில் மிருந்தெதாண்டர்
பொங்குகுங்கிலியத்தைச் சங்கரர்கோவிலில்
பொகக்கூத்தா னாதத்தில் ஏடுக்கிவைத்துத்
தங்கள்திருமனைக்குப் போகாமற் காலகாலர்
சரணத்தி யானத்தில் கோவிலில்தானே
புங்கவரிருந்தார் தன்னும் விரட்டானத்தில்
பொருந்துமுக்கண்ணர்தந் திருந்துசன்னிதானத்தில் (குங்கி)

உ - விருத்தம்.

சிலராலயத்திருக்க இவர்தம்வீட்டிற் சிவனருளாற்குபேரனிதிகளை நிறைத்தான், நூலபாவியுமிரவிற்பரியால்தூங்குந் தொண்டர்மனை யாள்களவிற்தனைச்செல்லக், கோலமாமருள்நினைந்துங்கிலியைக்கண் டுகொழுதனர்க்கழுதாக்கச்சென்றுளீசர், சாலநீபித்தாயன்மனைக் கேகென்னச சார்ந்திட்டாரன்பர்களிகூர்ந்திட்டாரே.

உ - கீர்த்தனம் - இராகம்-கல்யாணி- ஆதிதாளம்.

பல்லவி.

கலியனருள்வந்துகண்டு மகிழ்ந்தார்
பலருந்தொழுத் திகழ்ந்தார்.

அநுபல்லவி.

நிலையாதசப்பொன் மணியும் பொருந்தச்
செய்தவர்கோவிலி லெய்தி யிருந்த (கலிய)

சரணங்கள்.

க. காலன்றனையுதைத்தகாலனன்பர்மனையில்நிறையவே குவித்த
கோலநிதியைக்கண்டேதுமன்பருக்கின்பமுறையவே எண்ணி
சால்வும்பசித்தாய் மனையிற்சென் றிகத்தில்
தகுஞ்சுவைப்பாலன்னம் உண்டு சுகத்தில்
சிலமாயிவாழெனத் தடுக்க அகத்தில்
சேரும்பயத்தினுடன் திருமனை யகத்தில் (கலிய)

உ. தரளமாதியாக் திருகுமணிகளின் குவைகளுந் செல்வின்
பெரியகும்பல்களுமிசிக்குப்பல்முகிலைவகளுஞ் சொல்ல
அரியதான ஓனி விளிடு பொன்னும்
அளவுறுகாசின் குவியலும் பின்னும்
விரிவதானபல வளக்களு மின்னும்
மேன்மையைமனையினிற் புகுந்தருள் மன்னும் (கலிய)

கூ. ஏதுநிதிகளென மாதைக்கேட்கவுவளிணங்கவே தில்லை
நாதனருளினிலிப்போதுவந்தென வணங்கவே இவரும்
தீதுபுரியவரும் நமனை முனைந்து
செயித்தவரருளென் னென்று நினைந்து
காதலாகிக்கையைக் கலியிற் புனைந்து
கண்ணீர்சொரிந்திட அங்கம் நனைந்து (கலிய)

கூ - விருத்தம்.

ஊர்கள்தொறும்பலியிரப்பாரருளாற்செல்வம் உயர்ந்தில்லாளமு தூட்டஉண்டுதொண்டர், சிறடியார்க்கென்றுமமுதூட்டும்நாளில்நி ருப்பனந்தாளரன்மேனிவிளைவைக்கண்டு, நேர்படுத்தப்பலவகையாம் உபாயஞ்செய்தும்நேர்படாதறிந்தாசன்வருந்தல்கேட்டுத்,தீர்வுசெய வினைந்தன்பர்திருப்பனந்தாள்சேர்ந்திட்டாரிதுசெய்யநேர்ந்திட்டாரே

கூ - கீர்த்தனம் - இராகம் - பியாகடை - ரூபகதாளம்.

பல்லவி.

பரமனேநேராகச்செய்து பரிவொடும்பணிந்தாரே.

அநுபல்லவி.

திருவளர்பனந்தாளிற்பொருந்தத் திருமேனிவிளங்கிருந்த (பர)

சரணங்கள்.

க. அரன்மேனிவிளங்கிருக்கும் அதனைச்சோழன்கண்டு பல
கரிகள்பூட்டி யிழுத்தும்நேர்படக்காணுதிடர் கொண்டு

இரவும்பகலுமிகவுந்துயர் எய்திச்சோழமன்னவ னையர்
பரிசறிந்துபரிவுட னுயர் பலைக்கானிலில்வந்து கலியர்(பர)

உ- ஆனையுஞ்சேனையுமரசனு மடைந்ததுன்பத்தை கோகி லவி
மானபூங்கச்சென்மீதுகயிற்றை அரன்மேனியில் க்கி
காணும்வருந்துவேனென்றாட்டினர்யவர்க்கயிற்றைமாட்டி.
ஈனமில்லா அன்பு கூட்டி யிழுத்துகல்லடுகையைநாட்டி.(பர)

கூ.தொண்டரிழுத்துவருந்தகேசே தொன்றுமசனேப்பார்த்தார் பல
அண்டருமலர்மாரிபொழிந்தார் அகிலத்தோரும் ஆர்த்தார்
எண்டிசையிலுள்ளவரும் வாழ யார்செய்வரிதென்றன்புசூழ
மண்டலத்தோர்புகழுஞ்சோழ மன்னனள்பாடியில் வீழப்.(பர)

ச - விருத்தம்.

ஈசனேசெய்திடக்கண்டாசன்போற்றி யேகவிவர்கடமுர்கோர்க்
திருக்கும்காளில், ஆசைமிகவப்பருஞ்சம்பக்தர்தாமும் அடைந்திட
லும்பணிந்தமுதுசெய்வித்தன்னர், நேசவருளடைந்தேன்பணியுஞ்
செய்து நிமலாடிநிழலடைந்தார்இவரைப்போற்றித், தேசுடையமீ
னக்கஞ்சாறர்செய்கை செப்புவேன்பவவலிர்குத்தப்புவேனே.

குங்கிலியக்கலியநாயனர்புராணமுற்றிற்று.

ஆதிருவிருத்தம் - கo - திர்த்தனம் - எ - கண்ணிகள் - 20.

வ

திருசிற்றம்பலம்.

கூ - வது. மானக்கஞ்சாற நாயனர்புராணம்.

க - விருத்தம்.

விஜோசர்பெறுகஞ்சர்வாரில்வேந்தர்சேனபதியாகி
உலவேளாளர்குலத்திலுதித்தொளிர்மானக்கஞ்சாறனெனும்
அளவில்பெருஞ்சீர்த்தொண்டர்மனையவள்பாலரனருளாலே
வளர்ஞொருபெண்பிறந்திடவு மகிழ்வார்அரனைப்புகழ்வாரே.

க - திர்த்தனம் - இராகம் - மோகனம் - மி - சாபுதாளம்.

பல்லவி.

மகள்பிறந்திடக்கண்டு களித்தாரே இன்ப
வாரியிலெங்காருங் குளித்தாரே.

அனுபல்லவி.

திகழுஞ்சடையில்கல மிகலாங்கங்கை யாறர் (மகள்)
திருவடிகளேந்தொழு திருந்தமானக்கஞ் சாறர்.

சரணங்கள்.

க. கனங்கொண்டகாதான் பார்க ளேவும் தொழில்
கலைச்செய்துதம்மிடங் தனில் மேவும்
தனங்களெல்லாங்கொண்டார் தனமென்றெண்ணி அவர்
சார்ந்திடிற்குறிப்பறிக் கிருத்துவாழும் இவர்(மகள்)

உ. சிலநாட்பின்னையில்லாத குறைவாலே ஈசர்
திருவடியைத்துதித்தார் புவி மேலே
கலமாமையராருளாற் குலவும்பெருமை துன்றும்
நல்லவர்மணஞ்செய்த இல்லாள்வயிற்றில்நின்றும்(மகள்)

கூ. பொருந்தும்பிறவித்துயர் தீண நீங்க நாதர்
புரியும்அருளாலின்ப மிகவிவாங்க
வருந்தும்பரிசுக்குமுறை சொரிந்தாற்போலொருக்காலே
வறுமையாளர்நிதி பெறுமொருசெயல் போலே(மகள்)

உ - விருத்தம்.

இலகுமகள்வளர்ந்துமணப்பருவஞ்சேர இவரோமகிழ்ந்தேயர்
கோன்கலிக்காமர்க்குக், கலியாணஞ்செயப்பெரியோர்கேட்கமானக்
கஞ்சாறரிசைந்திடவுமவர்போய்ச்சொல்லக், குலவுகலிக்காமர்கலியா
ணஞ்செய்யக் குறித்தநாட்பலர்சூழக்கஞ்சாறர்க்கு, நலமிகவேவரு
முன்புகயிலைநாதர் நண்ணினரா ஆண்டருள எண்ணினரே.

உ - திர்த்தனம் - இராகம் - ஆடாணை - ஆதிதாளம்.

பல்லவி.

முனிவர்போலவே வந்தாரே மானக்கஞ்சாறர்
மனையினிற் புகுந்தாரே.

அனுபல்லவி.

தினமும்பெருமகிழ்வு மனமதி லமைய
தேவர்பணியும்பரமர் மாவிரதநம் சமய (முனி)

சரணங்கள்.

க. திருப்புண்டரம்துதை வினிலொளி நீடச
சிகையிலெலும்புமணி கோத்தெழில் கூட
இருகாதிலெலும்புக் குண்டலம் ஆட
என்புமனிமாலைதாழ அன்பரெவருங்கொண் டாட (முனி)

உ. பரவும்அரவொளிக்க தோளினில் யோக
பட்டையணிந்தமையி நினைவா மாகப்

புரிமுந்நூலணிந்து நீற்றின்னை போகப்
பொக்கணிங்கொண்டன்பர்பிறவிக்கணங்கண்டோடிப்போக(மு)

கூ. மணியணிருத்திரக் காதத்திற்கொண் டரிய
மறைக்கோவணத்தின்மேல் ஆடையும் விரியத்
தணியுமனத்தன்பரைக் காத்திடற் குரிய
தாளிற்பஞ்சமுத்திரைகொண் டாளப்பரிந்து பெரிய (முனி)

சு. பொடிமுடியதனல் போதுடல் மீது
பொருந்தநீறணிந்து பொற்பதப் போது
படிமேற்படிந்திடும் படியந்தப் போது
பத்தரையாதரித்திட இத்தரைபுகழச் சாது (முனி)

கூ - விருத்தம்.

விரைவாய்மனையிற்புகுந்தம்காவிரதமுனிவர்தமைத்தொண்டர்
பரிவாயெதிர்கொண்டேத்தியடிபணிந்துதான்முள்செயுந்தவத்தால்
பெரியோரென்பாலெழுந்தருளப்பெற்றேனென்றுபலதுதிகள்
புரிசிர்த்தொண்டர்தமைநோக்கிப்புகன்றார்கயிலைஅகன்றாரே.

க - கண்ணிகள் - இராகம் - முகாரி - சாபுதாளம்.

க. திங்கமானமனத்தன்பர் பொங்குமானக்கஞ்சாற்றே
இங்கென்னமங்கலமென்று சங்காரக்கேட்கப்
புங்கவரேயென்மகட்கு மங்கலமென்றன்பர்சொல்ல
அங்கணரும்மங்கலமாம் உங்களுருக்கென்றார்.

உ. சொன்னவரைப்பணிந்தன்பர் உன்னிமணக்கோலங்கொண்ட
மின்னிடையைக்கொணர்ந்துதர தென்னவவோதவே
அன்னவரும்பணியும்போ தென்னையாளுமையரவள்
பின்னிநீண்டமலர்க்கூந்தல் தன்னைநோக்கியே.

கூ. காணுமிவள்கருங்கூந்தல் பேணிநம்பூண்டிமையிப்
பூணலற்காமெனச்சபை வாணரோதவே.
காணுவடியார்கள்நெஞ்சு கோணிடாமற்செய்டவர்கல்
யாணப்பெண்ணென்றெண்ணரைய ராணையெண்ணியே.

சு. ஓங்குமுடைவாளுருவித் தாங்குமகள்கூந்தல்தன்னை
நீங்கவடியோடறுத்தற் தாங்கொடுக்கவே
வாங்குவார்போலவேயன்பர் பாங்குறின்றவாமறைந்து
பூங்குழலாளொடுமேற்றில் ஓங்குதோன்றியே.

ரு. அண்டர்கள்மலர்பொழிய விண்டலத்திலிருந்தத்தொண்டர்
கண்டுபோற்றிபரவசம் அண்டிநிற்கவே

அண்டகாய்கருங்கம்மேற் கொண்டகன்னன்பினேயாரும்
மண்டலத்திற்காணச்செய்தோர்தொண்டனேயென்றார்.

கூ. விண்ணிற்கணகாதர்போற்றப் பெண்ணெடுமவிடைமேல்கின்ற
அண்ணலாரைத்தரிசித்து மண்ணின்மேல்நின்று
கண்ணிலீர்சொரியத்துதி பண்ணிக்கைகுவித்துநெஞ்சில்
எண்ணியீசரருள்பெற்றார் புண்ணியத்தொண்டர்.

எ. மாயஞ்சமயியாவையர் தாயதொண்டருக்குகன்மை
ஆயவருள்செய்துகயி லாயமேவினர்
நேயநற்தம்மகனோயன் பாயுவந்துமணஞ்செய்ய
ஏயர்கோனுங்கவிக்காம காயனுவந்து.

அ. இக்கலகத்தன்னைக்கேட்டெ சிந்தையில்மகிழ்ந்துதிவா
னந்தமேவினின்மலர்ப் நித்தஅருளால
சுக்கரமாங்கூந்தல்பெற்ற அந்தமானதமணஞ்செய்து
சொந்தமானதம்புதியில் வந்துமகிழ்ந்தார்.

சு - விருத்தம்.

ஏயர்கோனரிவாறங்கிருந்துமகிழ்ந்தாமிருந்தபுக
ழாயகலையானத்தினத்திலழகார்மகள்கூந்தலேயரிந்து
நேயமாயன்பருக்களித்தநில்லார்தாள்பணிக்தரிவாட்
டாயனார்தம்பெருமைதனைச்சாற்றிப்பிறப்பைமாற்றுவனே.

மாளிக்கஞ்சாறநாயனார்புராணமுற்றிற்று.

ஆதிருவிருத்தம் - கஅ - கீர்த்தனம் - எச - கண்ணிகள் - உக.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

கூ - வது - அரிவாட்டாயநாயனார்புராணம்.

க - விருத்தம்.

கயமாருசோழநாட்டிலில்மன்னியசிர்க்கணமங்கலகதில்
உயர்வேளாளர்குலத்திலுதித் தியலுர்க்காயரென்னுமொரு
பெயராரர்காரும்அரிசியுங்கொணரையுமாவவிரும்பெரின்ப
மயமாஞ்சிவனர்தமக்களிக்கும்மியமென்னுமவழுவாரே.

க - கீர்த்தனம் - இராகம் - கேதாரகவுளை - ஆதிதாளம்.

பல்லவி.

அன்புநிருந்தாரே பரமனர் அருளைபெறத்தருந்தாரே.

அனுபல்லவி.

இன்பமுடையமனே யறஞ்செய் நேயனூர்
அம்புவியினில்விசை நிறைந்த தாயனூர்(அன்பு)

சரணங்கள்.

க. அம்புவியினே அளந்து புகழ்பெருகும்
அரியிந்தமண்ணைப்பிளந்து பன்றியாய்சென்றும்
முன்புகாணமல்த் தளர்ந்து மயங்கச்செய்து
அம்பலத்தினில் கடிக்க இணங்கும்
செம்பதத்தினை னினைத்து வணங்கும் (அன்பு)

உ. மஞ்சுசேர்ம்தில் நீளும் அளகைதனே
மகிழ்வுடனே ஆளும் குபேரன்போல்
மிஞ்சுதனங்கள் நாளும் பெருகுமன்பர்
நஞ்சுதங்கவொளிர் கண்டரிடத்தில்
நெஞ்சிலன்புடைய தொண்டரிடத்தில் (அன்பு)

ங. தொல்லுலகங்க ளுய்யக் கோவில்கொண்ட
சோதியார்க்குத் துய்ய நிவேதனம்
செல்வமாக்கச் செய்யச் செங்கீரையுஞ்செங்
நெல்லரிசியுமா வடுவு மளிக்கும்
நல்லதொழில்விடா தினிது களிக்கும் (அன்பு)

உ – விருத்தம்.

செங்நெல்லின்வெள்ளரிசியொடு செங்கீரையுமாவடுவுமொளி
மின்னுஞ்சடையார்தமக்கென்றும் விரும்பிக்கைவேத்தியஞ்செய்ய
மன்னுந்தாயனூர்கொடுத்து வரும்காளர்தூரருளாலே
தன்னுந்தனம்நிங்கியும்பானேத்தொழுவார்தொண்டுவழுவாரே.

உ – கீர்த்தனம் – இராகம் – பைரவி – ஆதிதாளம்.

பல்லவி.

முன்போலவேதொண்டு செய்தாரே தொண்டர் (முன்)

அனுபல்லவி.

என்பாரமனிந்தாதன் தன்பாரமென்பதல்லாமல்
என்பாரமென்னிருக்கின்ற தென்பாரன்புவழுவாமல் (முன்)

சரணங்கள்.

க. நீலநெல்லறுத்துவருங் கூலிநெல்லீத்தாம்புசித்துக்
கோலமாஞ்சம்பா அறுத்துக் சாலிவருங்கூலிநெல்லீத்

தாயனூர் மிகுந்த நேயனூர் மகிழ்ந்து
மாயனூர்கண்ணைத்தடத்த தூயனூர்தமக்களித்து (முன்)

உ. வயலெல்லாங்கார்வீளையாமல்நயமாஞ்சம்பாநெல்விளைய
நயனமூன்றுடையார்செய்தநியல்புகண்டிதுவேகன்றென்
றெண்ணினார் விரைந்து கண்ணினார் கூலியைக்
கண்ணுதலமுதுசெய்யும்புண்ணியஞ்செய்தேனென்று (முன்)

ங. பொருந்துமாகாரமில்லாமல் வருந்தியில்லாள்பலகிரை
அரிந்தவித்துத்தரத்தொண்டர் அருந்தியிப்படிச்சிலகாள்
ஆகவே அதுவும் போகவே மனையாள்
பாகமாய்நீர்வார்க்கவுண்டு பாகமாதுடையவர்க்கு (முன்)

ங – விருத்தம்.

நீர்நுந்திச்சம்பாநெல்லரிசிதன்னை நிமலனுர்க்கமுதாக்கக்கொடுக்
கும்நாளில், பேரடியாரொருநாட்கூடையினில்மாவின் பிஞ்சுநிரைசெ
ங்கீரைகொண்டுசெல்ல, ஏர்மனையாள்பஞ்சகவ்ய மெடுத்தப்பின்
சென் றிடப்போம்போதடிதவறிவெடிப்பிற்கீரை, சேர்வுறுமாவடு
அரிசியெல்லாஞ்சிந்தத்தெரிந்திட்டாருஞ்செய்கை புரிந்திட்டாரே.

ங – கீர்த்தனம் – இராகம் – மந்தியமாவதி – ஆதிதாளம்.

பல்லவி.

அரிவாளாற்கழுத்தை அரிந்தார் செய்ய
அரியசெய்கை புரிந்தார்.

அனுபல்லவி.

பரிவாயையர்க்கமுது புரியவண்ணி வெறுக்கும்
பவந்தொலைந்திடக்கூவிக் குவந்துசெல்லறுக்கும் (அரி)

சரணங்கள்.

க. மாவடுவரிசிசெங் கீரைவேத்தியஞ் செய்ய்
மிழ்ந்தன்பர்கூடையிற் கொண்டுபோம்போதுதுய்ய
சேவடிதவறியே வெடிப்பினிலுல குய்யத்
திருவேதனமெல்லாஞ் சிந்திடக்கண்டு வெய்ய (அரி)

உ. பின்பாய்வருமனையாள் காதலாய்க்கூடை பினைப்
பிடித்தும்நில்லாமல்நிலவெடிப்பிற்சிந்தக்கண் டனை
அன்பாகவாண்டிடும் என்பெருமானி கனை
அமுதுசெய்தருளானான்அடைந்திலனென்று முனை (அரி)

கஞ

கூ. ஏதுக்குநானங்கே போகுவதினி மேலே
ஈசரமுதுசெய்ய இல்லையென்றெருக் காலே
தீதுற்றபிறவியை மறிந்தறுப்பவர் போலே
சிந்தைகலங்காமலே அழுந்திடக்காத் தாலே (அரி)

சு - விருத்தம்.

எமையாளுமன்பர்கழுத்தியரீவாள் பிடித்தகையையெழில்சேர்தி
ல்லை, விமலனுர்தங்கையாற்பிடித்துமாவடுவைவிடேல்விடேலென்
றோதை, அமையவேகடித்துவெடிப்பினில்நின்றும் எழுந்தருள அறி
ந்துசென்மச், சுமையொழியத்துதி புரியுந்தொண்டனுக்கருள்வார்சி
கண்டனரே.

சு - கீர்த்தனம் - இராகம் - பர்சு - ஆதிதாளம்.

பல்லவி.

தொண்டருக்கருள் கொடுத்தாரே புலியின்
தோலினைமிழ்ந்திடை மேலுடுத்தாரே. (தொண்ட)

அனுபல்லவி.

அண்டர்நாதர் தொட்டபோதில் அடித்த்
ஆனந்தம்பொங்கி வெவ்வினையை விடித்த (தொண்ட)

சரணங்கள்.

க. வெடிப்பிலெழுந்துமா வடுவைக் கடிக்கும்
விளங்குமோசையொடு கையைப் பிடிக்கும்
படிக்குக்கிடைத்ததை நினைந்து நடிக்கும்
பாதங்கண்டுகண் னீரை வடிக்கும் (தொ)

உ. விரும்பியென்றன்அறி யாமையைக் கண்டு
வெடிப்பிலமுதுகொண்டருளினான் தொண்டு
புரிந்ததைவிளக்கினை யெனத்துதி விண்டு
போற்றிபோற்றியென்னு மன்பு கொண்டு (தொ)

கூ. காடிவிடைமிசைத்தங் கோலத்தைக் காட்டி
கன்முரீபுரிந்த கன்மனை யாட்டி
யோடும்நம்மூலில் வாழென நாட்டி
உம்பர்க்கரியபே ரின்பத்தைக் கூட்டித் (தொ)

இ - விருத்தம்.

அரனுரிவ்வாறருளிச்சிவலோகத்துக் கன்பர்மனையாரோடுங்கூட
ணணைப், பரிவாகவிடைகடத்திச்சென்றுரீசர் பரிந்தமுதுசெய்யவி
லையெனக்கழுத்தை, அரிவாளாலரிந்ததனல்அரிவாட்டாய நாயனி
னிவர்பாதம்பணிந்துவாழ்த்தி, உரியஆனயர்செயல்தெரிந்தமட்டும்
ஓதுவேன்பவநோயைமோதுவேனே.

அரிவாட்டாயநாயனுர்புராண முற்றிற்று.

ஆகிருவிருத்தம் - ககக - கீர்த்தனம் - எஅ - கண்ணிகள் - உக.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

மச - வது. ஆனயநாயனுர்புராணம்.

க - விருத்தம்.

மேன்மழநாட்டிலம்மங்கலவூரில் விளங்கும்ஆயர்களுலத்துதித்தார்
நான்மறைபுகழவயர்திருநீறு கலம்பெறஅணியும்ஆனயர்
வான்மதிகங்கைமுடிமிசையணிந்த வள்ளலார்பதங்களைப்பணியும்
பான்மையில்வழுவாதுலகினிற்புகழைப்பரப்பினர்சிறப்பினர்தாமே.

க - கீர்த்தனம் - பூரிகல்யாணி - திரிபுடதாளம்.

பல்லவி.

ஆனயருலகினிற் சிறந்தாரே இந்த
அகிலத்தோர்பிழைத்திடப்பிறந்தாரே.

அனுபல்லவி.

தேனுயகொன்றையார் திருவருளாற் கனித்த
ஞானங்குரம்போலவே கன்மையாக உதித்த (ஆனு)

சரணங்கள்.

க. ஐயர்தந்திருநீற்றை அன்பாற்சாத்தி மனத்தில்
மெய்யிலெவாயிற்செய்யுஞ் செயலெலத்தில்லை வனத்தில்
துய்யநடஞ்செய்பாதத் துணையன்றிப்புவனத்தில்
தெய்வம்வேறிலையெனத் தெளிந்தகாய தினத்தில் (ஆனு)

உ. தானகத்தினில்மிரு கஞ்செய்கொடுமை தீர்த்து
ஆனினங்கள்புல்லை அருந்திநீருண்டு தேக்கி

ஊனமில்லாமல்வளர்ந் தோங்கிடவள மாக்கித்
தேனுறைகொன்றையார் திருக்காளில்மனம்போக்கித் (ஆனை)

கூ. சினைப்பசுக்கூட்டமுந் தினம்பால்கறக்கும் ஆவும்
கனைக்குஞ்ஞகஆலுங் கன்றின்கூட்டமுங் தாவும்
சினக்காளைகளும்இன்னஞ் செழுபலவித்தக் கோவும்
இனத்துடன்பலகோட்டி னில்வாழும்வள மேவும் (ஆனை)

ஙு. எய்தியேவல்செய்யும் இடையர்கள் — நேரிக்கும்
செய்யபசுக்களேமேய்த் திடச்செய்து பூரிக்கும்
மெய்யர்பஞ்சாக்ஷரத்தை யேஜபஞ்செய் வாரிக்கும்
செய்கைவிடாதுலை தினமுபசரி காசிக்கும் (ஆனை)

உ - விருத்தம்.

தொண்டருமிப்படிவாழ்நாள்தன்னிலோர்நாள் துலங்குமலங்
காரமாய்க்கைதைற்கோலுங், கொண்டெழுந்துவேலைசெயுமிடையர்
யாருங் கோக்குலத்தையோட்டிச்சூழ்ந்திடவனத்தில், அண்டியொ
ருகொன்றைமரந்தனைப்பார்க்கும்போ தழுமலர்சூழ்சடையார்போற்
றொன்றலோடும், பண்டின்மிகும்அன்புபொங்கவேணுகானம் பண்
ணினாளனையாளகண்ணினுரே.

உ - கீர்த்தனம் - இராகம் - சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

வேணுகானஞ்செய்தார் ஆயர் (வேணு)

அநுபல்லவி.

காணுஞ்சராசரம் எல்லாங்கான மயமாய்க்
கண்ணனும்நாணங்கொண் டிடவேமிகு நயமாய் (வேணு)

சரணங்கள்.

கூ. செனிடாமற்சுருதிப் பதுனிருகிகளின்
பேதம்அறிந்து மந்தரம் மத்திமந்தாரம்
இசைசேரும்ராகத்தின் ஆதிதம் அனுதாதம்
எனுமியல்போர்ந்து சுந்தாம் ஆனதடை
தசவிதப்படிஅவ குணம்பத்தும்விட்டு வாதி
சம்வாதிஅநுவாதி விவாதியெனும் நந்தி
அலசமாமல்நாதத்தின் மத்தியில்வாழுஞ் சோதி
ஆனதாதிவன்னன் ஸ்ருதிபதுக்தையும் ஞதி(வேணு)

உ. எழுவிரல்கோவண்டு தாவிப்பிடிப்பதுபோல்
இடைத்துளைவழி போக்கி இடங்கொடுத்து
அழகாகமெலிவித்துஞ் சமஞ்செய்தும்வலிவித்தும்
ஆனந்தமுண் டாக்கி சாஸ்திரப்படி
வழுவாமலேயெந்த இடத்தும்நிறையக் கான
மத்துரத்திலெந்தெழுத்தைக் கலந்திடலால் வானச்
செழுமைத்தருமதுவி லமுதஞ்சேர்த்தாம்போல்ஞானத்
திருத்தொண்டர்அதரத்தில் வைத்துப்பெருமையான (வே)

கூ. வளரும்புல்லேமேய்ந்தசை போடாமற்பசுவெல்லாம்
மயங்கிடஇளங் கன்று வாய்மூலைவைத்தும்
வளமாயுண்ணுமல்கிற்கக் காளைமான்முகலெல்லாம்
மயிர்சிலிர்த்திட நின்று கேட்டுருக
இளமையிலும்ஆடாமற் புள்ளுங்கூவாமல்த் தங்க
ளவ்வுலகோருஞ்சூழ்த் தேவமின்னார்ம யங்க
மிளிரும்அண்டர்கின்னரர் விஞ்சையர்உத் துங்க
விமானத்தினில்வந்து சூழ்ந்திடநயம் பெய்ங்க (வே)

ஙு. ஏரானகிதநாத அமிர்தமுண்கிரணம்
எல்லாம்ஒன் முகப் பாம்புமயில்மேல்
சோர்வாகிவிழியானே சிங்கத்தோடையமான்
துஷ்டப்புலியோ டேகக் காற்றும்விசையரய்ச்
சாராதருவிருகி பிரையாமல்மாக் கொம்பும்
சலியாமல்நிற்கப்பட்ட மரமுந்தளிர்கி ளம்பும்
சீராகமேகஞ்சேர்த்துங் கெர்சித்திடாமற் பம்பும்
திரைக்கடல்களுமுழங் காமற்கேட்கவி ரும்பும்(வே)

கூ - விருத்தம்.

ஆனாயருமிப்படிவேயி லமைத்தகானம்புவிநிறைந்து
வானுயியல்லுலகையுந்தன் வசமாச்செய்தம்பலத்தாடுங்
காணுதிபர்ந்திருச்செவியிற் கலந்துநிறையஇவர்முன்பு
தேனார்கொன்றைச்சடையுடையார் சேர்ந்தார்கருணைகூர்ந்தாரே.

கூ - கீர்த்தனம் - இராகம் - கவுளிபந்து - மி - சாபுதாளம்.

பல்லவி.

நாயகனர்வந்தருள் புரிந்தார் வேணு
ஓதங்கேட்டினம் பரிந்தார்.

அனுபல்லவி.

தாயவேதங்களும் அமரர்யாவர்களும்
தொடர்ந்துதொடர்ந்தும்எல்லே காணத்தில்லே (காய)

சரணங்கள்.

க. வளம்பெறமுழங்காத எழுகட லென்னவே
வாழ்த்திடாமல்அண்டர்கணநாதர் துன்னவே
விளங்கும்தாற்படி செய்தவேணுகானங்கேட்டு
மிகவுமகிழ்வுமன்னவே நலமின்னவே (காய)*

உ. மின்னல்போல்ஒளிவீசுஞ்சடையிற்கொன்றைப்போது
வெண்மதிநதிதும்பை விளங்கிடமேலே மாது
தன்னேயொருபுறத்திற் கொண்டுகையிலேபோலத்
தங்கும்வெள்ளிடைமீது மகிழ்ந்தப்போது (காய)

கூ. முதல்வனாந்தெழுத்தையுங் கானஞ்செய்யமுன்னின்று
முகமலர்ந்துகேட்டுத் தொண்டனேனீ யின்று
முதலென்றும்நாங்கேட்க இப்படியேநமது
முன்புவருவாயென்று பரிவாயன்று (காய)

ச - விருத்தம்.

தொண்டனர்க்கிவ்வாறருளித்துலங்குமுனிவர்மறைமொழிய
அண்டர்பூவின்மழைபொழியஅன்பருரும்வேய்ங்குழலிக்
கொண்டுகானஞ்செய்துவந்துகூடவேவந்திடுகாதர்
புண்டரீகபுரச்சபையிற்புகுந்தார்கருணைபிருந்தாரே.

சுந்தரமூர்த்திசுவாமிகள் துதி.

ஞ - விருத்தம்.

நிலைக்கும்புகழ்சேரூரில் நேயமாகவிவரவில்
மலைக்குநிகர்மென்முலைப்பரவை மனையிலிசைன்றுதொழுது [லை
செலக்கண்ணுதலார்தமைவிடுத்தார் திருத்தாமரைத்தாள்பணிந்தது
அலக்கணெனபிறப்பிறப்பை யடையேன்மேன்மையுடையேனே.

இலேமவிந்தசருக்கம் முற்றிற்று.

ஆதிருவிருத்தம் - கதஅ - கீர்த்தனம் - அக - கண்ணிகள் - உக.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்.

கூ - வது. மும்மையாலுலகாண்டசருக்கம்.

ஐந - வது. மூர்த்திநாயனார்புராணம்.

க - விருத்தம்.

வளங்கொள்பாண்டிநாடதனில் மதுராபுரியிற்புகழோங்க
விளங்கும்வணிகர்குலத்துதித்து மேன்மைமிகுத்தமூர்த்தியார்
இளந்தண்மதிசூடியபான்மு னிணையேதுணையாய்ப்பணிந்தன்றும்
களங்கமில்லாத்தொண்டுசெய்து களிப்பாரின்பமளிப்பாரே.

க - கீர்த்தனம் - இராகம் - காம்போஜி - மிச்ர - சாபுதாளம்.

பல்லவி.

திருக்கொண்டுசெய்தார் விடாமலே என்றும் (திரு)

அனுபல்லவி.

கருத்துறும்அன்பென் னும் மூர்த்தியார் புகழ்
கதித்தவைசியர்குலத் துதித்தருள் மூர்த்தியார் (திரு)

சரணங்கள்.

க. இகத்திற்பொன்னிலமாதர் ஆதியாய்ச் சொல்லும்
எப்பற்றினையும்விடுத் தொப்பற்றசோதியாய்ச்
சகத்தினைவிளக்கிடும் ஈசனர் பாதந்
தனேமெய்ப்பற்றெனப்பற்றி மனமகிழ்நேசனர் (திரு)

உ. தவருத்துனையான இனங்களும் போற்றத்
தகுந்தெய்வமும்மல மிரும்பந்து ஜனங்களும்
சிவபரனால்லால் வேறில்லார் உயர்
சித்தத்திலுதித்திடும் பத்தியில் மாறில்லார் (திரு)

கூ. சந்தமும்புகழ் கூடிடும் மதுரைத்
தலத்தினில்வெள்ளியம் பலத்தினில் ஆடிடும்
சுந்தரேசர்க்கின்பம் எய்திடும் வாசம்
தலங்குஞ்சந்தனக்காப்புகலங்கொளச்செய்திடும் (திரு)

உ - விருத்தம்.

இப்பரிசாயநனர்க்குத்தவருமற்சந்தனக்காப்பியற்றும்நாளிற்
செப்பரியதிறல்வடுகக்கருநாட்மன்னவன்வந்துசினத்துபோர்செய்

கப்பதிமன்னவனைபாண்டியனைச்செயித்துத்தானாசனஞ்சி
வெப்பமிகஅரசாகஇவ்வுலகத்திட்டான்திமையாய்முழுத்திட்டனே.

உ - கீர்த்தனம் - இராகம் - தன்னியாசி - திரிபுடதாளம்.

பல்லவி.

கொடுமையாகஅர சாகஞ்செய்திருந்தான்கார்
கடமன்னவன்தானே.

அநுபல்லவி.

திடமிகும்பாண்டியனைச் செயித்துத்தன்பெலத்தாலே
சிங்கமுற்றஇடத்தில் செந்நாயிருந்தாற் போலே (கொடு)

சரணங்கள்.

க. பங்கமானசமணர் தங்கள்சமய மென்னும்
பங்கத்தில் அழுந்திம யங்கியே உமை
பங்கர்தந்திருநீற்றை அங்கத்தணிதல் நீங்கிப்
பையச்சமணர்சொல்லும்பொய்யைமெய்யெனத்தாங்கி(கொ)

உ பவத்தைப்பெறுமருகர்தவத்தைமெய்யெனவெண்ணிச்
சிவத்தையுமியுமன்பர்க் கவஸ்தையே செய்து
அவத்தையடையுமனத் தவர்க்குலங்கள் மன்ன
ஆனையுற்றவிடத்திற் பூனையுற்றது வென்னக் (கொ)

கூ.மூர்த்தியார்செய்திடுங் கீர்த்தியாஞ்செய் கையைப்
பார்த்துப்பொறுமையால்த்தார்த்தலும் இதைத்
தீர்த்தருகருக்குச்சீர் சேர்த்திடவே பரிந்து
நீங்குகளனத்தமாய் ஆங்குமிகப் புரிந்து (கொ)

ச. துன்பம்அனந்தஞ்செய்தும்அன்பனர்கலங் காமல்
முன்புபோல்த்திருப்பணி இன்பமாய்ச் செய்யப்
பின்னிதறிந்துமன்ன வன்பொறுமை படைத்துப்
பெருகச்சந்தனக்கட்டை வருதுறையை யடைத்துக் (கொ)

கூ - விருத்தம்.

வெய்யகோவிவன்செலுத்தமூர்த்தியாரு மெலிந்திவண்மாண்பியர்
ந்தகிருநீறுபோற்றுந், துய்யமன்னரைப்படைவதெங்காளென்று துய
ருடன்சந்தனக்கட்டையெங்குந்தேடி, மெய்யன்பாற்பார்த்துமகப்
டாமல்நொந்துவிமலனர்திருக்கோயில்தன்னில்வந்து, செய்யசந்தன
க்கல்லின்முழுங்கைதன்னைத் தெய்த்திட்டார்பவவினையைமாய்த்திட்
டாரே.

கூ - கீர்த்தனம் - இராகம் - அசாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

முழங்கைகளினைத்தேய்த்தார் சந்தனக்கல்லில் (முழங்)

அநுபல்லவி.

மழுங்காத கீர்த்தியார் அனையென்றும்
வணங்கிடு மூர்த்தியார் பரிவெய்தும் (முழங்)

சரணங்கள்.

க. சந்தனக்கட்டை தேடி விற்பவரிடக்
தகிற்பகலெல்லாம் ஓடிப் பார்த்துங்கிட்டாமல
சிந்தைமிகவும் வாடிச் சுந்தரச
திகழுங்கோவிலிற் கூடி மனந்துணிந்து (முழங்)

உ. செய்யவிசனுக் கின்று சந்தனக்காப்பின்
செயல்குறைந்தாலும் இன்று சந்தனந்தேய்க்கும்
கையுய்குறையா தென்று மூர்த்தியார்
களிப்புடனே அன்று கூசாமலே (முழங்)

கூ. சத்தமுஞ் சொரிந்திடவே நெறுநெறென
வதும்பும் வெரிந்திடவே கட்டுரம்பின்
பத்தியும் பிரிந்திடவே தோலொடுமூளை
பரந்து சரிந்திடவே ஓயாமலே (முழங்)

ச - விருத்தம்.

மூர்த்தியாருமனத்தன்பு சேர்த்திவ்வண்ணமுயன்றிடும்
பார்த்துப்பொறுத்திடாமலட்ட மூர்த்தியாகிப்பத்தர்மனத்
தார்த்திதிர்ப்பாரருளாலே கீர்த்தியின்பாகத்துயரைத்
தீர்த்தவிடவேஅவ்விரவில் ஆர்த்தோர்வாக்குச்சென்றதுவே.

ஈ - கீர்த்தனம் - இராகம் - கரஹரப்பிரியை - மி - சாபுதாளம்.

பல்லவி.

அசரீரிவாக்கெழுந்ததுவே அப்போ (தசரீ)

அநுபல்லவி.

நிசமாமன்பின்துணிவால் நீயிந்தப்பூவி மேலே
விசனமாயிதுசெய்ய வேண்டா மென்றரு ளாலே (அசரீ)

சரணங்கள்.

க. நன்னிஉனக்குத்துன்பம் காட்டும்வேந்தன் காக்கும்
மன்னெல்லாம்நீயாள்வாய்மகிழ்ந்தென்றலைமாக்கும் (அசரீ)

உ. வெய்யசமணர்பொய்யை மெய்யென்றாசை னெண்ணிச்
செய்யுந்தீங்கினையெல்லாந் தினைவே ணண்ணி (அசரீ)

கூ. இலகுஞ்சந்தனக்காப்பும் இயற்றிநம் முடைய
உலகில்வந்திடலாமென் றுவந்துமென்மை யடைய (அசரீ)

ரு - விருத்தம்.

இவ்விதமெழுந்தவாக்கைக் கேட்டெழுந்தஞ்சிப்போற்றி
உய்விதமுடையார்கையை உரைத்தபுண்ணெல்லாம்நீங்கிச்
செவ்விதாமுடம்பில்வாசஞ் சேர்ந்தொளிமயமேயாகி
அவ்விரவெல்லாமீசர் ஆலயத்திருந்தான்மே.

க - கண்ணிகள் - இராகம் - தோடி - ரூபகதாளம்.

க. அந்தஇரவிற் சமணமதத்தி
ருந்தமன்னன் மடியவே
பந்துவும்அவன் மனைவிகளும்வ
ருந்தஇரவும் விடியவே.

உ. அன்னபொழுது மந்திரிகளுந்
துன்னிக்கடன்கள் பண்ணினர்
மன்னவனுக்கு மைந்தனில்லை
யென்னசெய்வதென் றெண்ணினர்.

கூ. புருஷனில்லா மங்கையுமுயிர்
பிரியும்உடலும் போலவே
அரசனில்லா நாடெனமந்
திரிகளெண்ணினர் சாலவே.

ரு. பட்டத்துயா னையைக்கண்கட்டி
விட்டிடில்அது கண்ணியே
கட்டியெடுக்கப் பட்டவர்பட்டங்
கட்டமென்னென் றெண்ணியே.

ரூ. விதிமுறையர்ச்சித் தொருவஸ்திரக்கால்
மதகரியைக்கண் கட்டியே
அதிபனைக்கொண்டு வாவெனவிட
அதுவும்விளைத்து கிட்டியே.

ரூ. வருமுன்புதொண்டர் திறைக்கண்டா
னருளெனில்நல மொய்க்கவே

அரசுசெய்வனென் றுலயகோ
புரவாசலில் றிற்கவே.

எ. மாதங்கந்திரு வீதிகடந்தப்
போதங்கண்பரைக் கண்டதே
பாதங்கள்பணிந் தெடுத்துக்கழுத்தி
லேதங்கவைத்துக் கொண்டதே.

அ. மூர்த்தியாரைப் பிடரியில்வைக்கப்
பார்த்தமைச்சர்கள் வணங்கவே
கீர்த்தியாக வாத்தியங்கள்
ஆர்த்தனபுகழ் இணங்கவே.

கூ. பரமனேத்திதாழ மூர்த்தியார்க்குத்
திருமங்கலங்கள் பாடினர்
அரமனையிற்பட் டாபிஷேகம்
புரிமண்டபத்திற் கூடினர்.

ல். சங்காதரர் திருத்தொண்டரைச்
சிங்காதனத சேற்றினர்
சிங்காரமாய்ச் செய்யும்முறைகள்
மங்காமலே ஆற்றினர்.

கக. அப்பொழுதமண மதம்போய்ச்சைவ
மெய்ப்பத்திகொண்டா லொப்பவே
இப்பதியா சான்வேனென
லொப்பிலாதவர் செப்பவே.

கூ. எப்படிச்சொன் னுலும்நாங்கள்
அப்படிநிற்போம் என்னவே
தப்பிலாமந் திரிகள்முதலோர்
செப்பினர்நலந் துன்னவே.

கூ. வையம்அரச செய்வேனெனில்
ஐயர்தம்மி பூதியே
தய்யதாமறி ஷேகமாகச்
செய்யவேண்டுமென் றோதியே.

கச. திருச்சடைமுடி யேமுடியா
யிருக்கநீல கண்டனர்

உருத்திராக்ஷமே யாபரணமாய்த்
கரிப்பேனென்றூர் தொண்டனூர்.

சு - விருத்தம்.

என்றமொழிகேட்டமைசசர்முதலாயுள்ளோர் யாவர்களுந்தவ
வேந்தர்செயல்நன்றென்று, பின்றபனிந்தேத்திடமங்கலவாழ்த்தெ
ங்கும் நிரம்பிடவேநிருவாலவாயின்கோயில், சென்றரனைப்பணிந்
தாயினின்றீதேறித் தெருவைவலங்கொண்டியர் மாளிகையிற்செ
ன்று, நன்றிகொள்சிங்காதனத்தி பிருந்துசெங்கோல் நடத்தினர்அ
ன்பின்மிகுதிட்டத்தினரே.

நி - தீர்த்தனம் - நிராகம் - காபி - மி- சாபுதாளம்.

பல்லவி.

செங்கோல்நடத்தினு ரன்பாக (செங்)

அனுபல்லவி.

வெங்கோல்செயுமன் னவன்மாளலுக்காம்
வேந்தராய்மிகு சாந்தராய்ப்புவி
மாந்தர்யாவரும் காந்துதித்திடச் (செங்)

சரணங்கள்.

க. தந்திரமுடைய மந்திரியெலரும்
சிந்தையின்குறிபோற் சந்தமம்நடக்க
நிந்தையமணர்கள் கூடியே புரி
புந்திறத்தினைச் சாடியே
நிறையும்பூதியின் நெறி விளங்கிட
மறுவிலாச்சைவத் துறையுயர்ந்திடச் (செங்)

உ. அருளுர்புக்ஷப் பரவும் மறையும்
வரமார்பஞ்சா க்ஷரமும்விளங்கப்
பொருவில்நீறணி யாக்கமும் சடைத்
திருமுடியும்முருத்தி ராக்கமும்
பூண்டும்மையால் வேட வுலகின்
ஆண்டுவக்கடல் காண்டிமமிழ்வொடி (செங்)

கூ. மடவார்வலையில் அடையார்புலனெலுன்
னுடையார்வழியாய் நெடுநெள்ப் படிமேல்
அடல்கொள்பகைவரை நீக்கியே நும்
நெடியாஞ்ஞை யாக்கியே

ஆர்த்தியாவர்க்குந் தீர்த்திலகமென்
தீர்த்தியாகவே சூர்த்தியார்கல்ல (செய்)

எ - விருத்தம்.

பரமன்னவர்வந்தடிபணியப் பலகாருலகாண்டுருந்தயர்மரல்
பிரமன்னறியாமலர்ப்பதத்திற் பேதமறவேகலந்திருந்தார்
உரமல்லியதிர்த்தியாரொளிர்தாள்பணிந்துமுருகனூர்
வரமன்னிடவேசெய்ந்தவத்தைவகுப்பேன்துயரைச்செருப்பேனை.

மூர்த்திநாயனூர்புராண முற்றிற்று.

ஆடுதிருவிருத்தம் - கூடு - தீர்த்தனம் - அசு - கண்ணிகள் - உட.

திருச்சிற்றம்பலம்.

கூ

திருச்சிற்றம்பலம்.

ஙசு - வது. முருகநாயனூர்புராணம்.

க - தீர்த்தனம் - நிராகம் - அசாவேரி - திரிபுடதாளம்.

பல்லவி.

முருகனூர்செய்த முவத்தினையுரைத்திட
முடியுமோமுடியாதே.

அனுபல்லவி.

திருவார்சோழநாட்டிற் புகலூர்த்தலத்தில் வாழும்
சிறந்தஅந்தணராகிப் பிறந்துபரனேத் தாழும் (முரு)

சரணங்கள்.

க. அன்பொடுவிடியுமுன் எழுந்துதீர்த்தமாடி
அகமிகவும் பரிந்து மரங்களின்
கொம்பின்மலருஞ்செடி மலரும்நீரின்மலரும்
கோடிமலருங் கொய்து
முன்பதாகவுங் தனவனத்தில அதித்து
முகைமலர்போதுபல் விதமலர்கள் னெடுத்துப்
பின்புவேறிடத்திருந் தன்பர்க்கிதங் கொடுத்துப்
பெருமைசேர்நாதர்க்குத திருமாலைகள் தொடுத்து (முரு)

உ. தொடைபலவிதமாகத் தொடுத்துக்காலங்களில்
விடையிலேறுஞ் சோதி யானவர்க்கு
நெடிய அழகாய்ச்சாத்தி அருச்சித்துப்பிதற்றும்
நிறையஞ்செழுத்து மோதித்

கடையறத்துதித்த னருளும்பெற்றுருக் காலே
சர்க்கரைப்பந்தலில்த்தேன் மாரிபெய்தாற் போலே
வடிவானதிருஞான சம்பந்தர்பரி வாலே
மகிழ்ந்துசெய்புமரு ஓயும்பெற்றுப்புவி மேலே (முரு)

கூ. புகலூரில்வர்த்தமா னீச்சரத்தனிலென்றும்
நிகழும்பாதினப் பணிந்து வாழும்நாள்முன்செய்
மிகுதவத்தாலேசம் பந்தக்கல்யாணத்தில்
அகமகிழ்வுட னணைந்து
மகிமைபெருகவென்று மானந்தநட மாடும்
வாதனையன்பொடுத் துதித்துப்பதிகம் பாடும்
புகழ்பெறுஞானசம் பந்தமூர்த்தி யோடும்
பொருந்துந்தொண்டர்களொடுந்திருமுருத்தியிற்கூடும்(முரு)

க - விருத்தம்.

ஞானசம்பந்தர்மணத்தினிலவரொடுநன்மை
ஆனமுத்திசேர்முருகனடியினைபுனைந்து
மானிடத்தரைமகிழ்முருத்திரபசுபதியார்
தேனின்மிக்கசீர்ச்சரித்திரத்தினையுரைசெய்வாம்.

முருகநாயனர்புராணமுற்றிற்று.

ஆ-திருவிருத்தம் - கஉசு - கீர்த்தனம் - அஎ - கண்ணிகள் - உஉ

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

ஙஎ - வது. உருத்திரபசுபதிநாயனர்புராணம்.

க - கீர்த்தனம் - இராகம் - சதஞ - ஆதிதாளம்.

பல்லவி.

உருத்திரபசுபதியார் சரித்திரத்தை
உரைத்திடலரிதாமோ.

அநுபல்லவி.

பொருத்தமாஞ்சோழநாட்டிலத் திருத்தலையூரிலவ
தரித்துச்சிவனடியில்த் திருத்தமாமன்புகொண்ட (உருத்தி)

சரணங்கள்.

க. தடம்பொய்கைதனிற் சென்று கழுத்தளவு
ஜலத்திலிறங்கி நின்று தலையின்மேல்

நெடுங்கைகளோக்குவித்து விடங்கொள்கண்டத்தர்மகிழ்
வடைந்திடவுருத்திரந் திடம்பெறவே செபிக்கும் (உருத்)

உ. பசுபதிதனை ஆதி வேதப்பொருளாய்ப்
பகருருத்திரம் ஓதித் துதித்தகனல்
பசுபாசம்நீங்கிஞானம் இசையக்கொண்டுருத்திர
பகபதியாரென்னும் இசையரனபேர்கொண்ட (உருத்)

கூ. பத்திமிருந்த தொண்டர் செய்கையைக்கண்டு
பரிந்துநீல கண்டர் செய்தஅருளால்
மெய்த்தவர்புகழ்ந்திட உத்தமராந் சிவபு
ரத்திலுயர்ந்தபேரின் பத்தையடைந்து வாழும் (உருத்)

க - விருத்தம்.

விரித்திசெடைமுடிவிமலர்தம்அருள்சேர்
உருத்திரபசுபதியார்புகழோதித்
திருத்திகழ்நாகைப்போவார்செய்ய
சரித்திரமகிமையைச்சாற்றிடுவாமே.

உருத்திரபசுபதிநாயனர்புராண முற்றிற்று.

ஆ-திருவிருத்தம் - ஈஉஎ - கீர்த்தனம் - அஅ - கண்ணிகள் - உஉ

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

ஙஅ - வது. திருநாகைப்போவார்நாயனர்புராணம்.

க - விருத்தம்.

அழகுபெறுகொள்ளிடன்னதிக்கருகாமேற்காநாட்டாதனூரில்
செழுமைபிதுவயல்மருங்குபெருங்கரைமேற்சுரைக்கொடிகள்செறி
ந்துசூழும், பழையசிறுகுச்சுகள்சேர்புலப்பாடிதனில்வந்தபண்பா
ர்ந்தர், மழுவுடையாரடிமலரைப்போற்றுவாரன்துயரைமாற்று
வாரோ.

க-கீர்த்தனம் - இராகம் - நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தனர் சிவசிந்தனையென்றும்பொ ருந்தினர் (நந்தனர்)

அநுபல்லவி.

இந்தவையகமு யார்துசிர்பெருக
அந்தவூரினிலி ருந்துவாழ்ந்திரு (நந்தனர்)

சரணங்கள்.

க. வேதம்நான் கினுக்கும் நாதனுரையெப்
போதும்நினைந்துதவுள் சாதிதனக்கிசைய
ஆதனூரிற்கொல்லை யாதியுழுதுவரும்
நீதிவித்தாளியத்தை யேதினங்கொண்டு (கந்தனார்)

உ. சங்கரன்கோவிலில்த் தங்குபேரிமிரு
தங்கமாதிசரு மங்கொள்வாத்தியமி
லங்கழுடுதோல் மங்கலில்லிவார்
மங்கலமாகக லங்கொளக்கொடுத்து (கந்தனார்)

கூ. மாசறுவிணைக்கும் ஆசைகொள்யாழுக்கும்
தேசுறுகந்திரி கேசமொடிங்கொடுந்
தீசனையன்பொடி டூசனைசெய்கிட
வாசனைமிகுகோ சோசனைகொடுத்து (கந்தனார்)

உ - விருத்தம்.

நந்தனாரப்பதியிற்றங்குலத்தின்தொழில்செய்துகாதனருக், திந்த விதஞ்செய்துசிவன்கோவில்முன்னின்றுடியும்பாட்டிசைத்துமன்பு, நிந்தைமிகவாழ்நாளில்த்திருப்புன்கூர்ச் சோவில்முன்புசேர்ந்தே னே, அந்தகாரியைத்தொழுதண்ணலும்நந்தி விலகையையருள்செய் தாரே.

உ - கீர்த்தனம் - இராகம் - மூகாரி - ஆதிதாளம்.

பல்லவி.

விலகஅருள்புரிந்தார் கந்திதேவர் (விலக)

அநுபல்லவி.

இலகுஞ்சிவலோகனார் நலமாந்தன்னிதானத்தில்
நிலைபெறவாழ்ந்திருக்கும் கந்திதேவர் (விலக)

சரணங்கள்.

க. நந்தனார்நமைத்தொழ இந்தவாசல்கோபர்
வந்திருக்கிறரென்று கந்திதேவர் (விலக)

உ. அந்தாயகத்திலன்பாய்ச சந்ததந்தொழுமன்பர்
சிந்தைமகிழப்பரனர் கந்திதேவர் (விலக)

கூ - விருத்தம்.

கந்திவிலகிடத்திருவாசலின்முன்னின்று நந்தனர்சிவலோகநாதர் கம்மைச், சிந்தைமகிழ்ந்தன்பினெதிர்மலரிதுவாழ்த்திச் செலும்

பொழுதோரிடம்பள்ளமாயிருக்க, அந்தவிடத்தினைச்சண்டுருளமாய் வெட்டி ஆலயத்தைவலம்வந்துபாடியாடி, வந்தனஞ்செய்தெழுந்து விடைகொண்டுநெஞ்சு வந்திட்டார்தம்மூர்க்குவந்திட்டாரே.

க. கன்னிகைள் - இராகம் - யமுனாகல்யாணி - ஆதிதாளம்.

க. ஆதனூரிற்புலைச் சாதியர்தெருவினில்
அகத்தில்நந்தனர் வந்தாரே
பாதிமதிதரித்த நாதசமர்ந்தருளும்
பலதலங்களினும டைந்தாரே.

உ. அந்தத்தலங்களிற்பொ ருந்தியபரம்னை
அடிபணிந்துவளி தாழ்ந்தாரே
அந்தகாரியும கிழ்ந்திடத்தொண்டுசெய்
தாதனூரிற்பின்னுந் சேர்ந்தாரே.

கூ. தேவாதிபருடன் மூவாயிரர்தொழுந்
தில்லைத்திருச்சபையை வணங்கிடவே
ஓவாமலேயென்றும் மேவாப்பெரியஅன்
புள்ளத்தன்னிலுதித் திணங்கிடவே.

ச. அன்திரவினில்நலந் துன்றுமன்பர்தங்
காமல்விடிந்தபின் புயர்தில்லை
மன்றினில்மகிழ்வொடு சென்றுபணியகான்
வன்குலத்தினுக் கிசைவில்லை.

ஙு. என்றெண்ணியிதுமும் மன்றுடையார்தம்
ஏவலென்றுசெல்வ தொழிந்திடுவார்
கன்றிபெருமன்பு துன்றிடத்தில்லைக்கு
நாளைப்போவேனென மொழிந்திடுவார்.

சூ. பொருவில்லாதஅன்பர் இரவினில்நாளைப்
போவேனெனச்சிந்தை பண்ணிடுவார்
இரவுவிடிந்தபின் பரியதில்லைக்குநான்
ஏகக்கூடாதென எண்ணிடுவார்.

எ. நாளைப்போவேன் நாளைப்போவேன்
நானெனைவேபல நாள்போக
வேளைப்பொழித்தவையர் தாளுக்கினைசத்தவரும்
மேவுவதொருநாள்த் துணிவாக.

அ. எழுந்துபலமுதிகள் மொழிந்துமகிழ்வுறுக
இசையுள்ளோர்ந்துவழுக் கொண்டாரே
தொழுந்தவரானுகினைத் தொழுந்திருத்தில்லையைத்
திருவிழியாலன்பர் கண்டாரே

கூ - கீர்த்தனம் - இராகம் - கரஹரப்பிரியா - ரூபகதாளம்.

பல்லவி.

தில்லையைக்கண்டார் நந்தனர் தில்லையைக்கண்டார்.

அனுபல்லவி.

எல்லையில்லாப் புகழ்கொளீசர்
இனையடிகளே மனத்திற் கொண்டார் (தில்லை)

சரணங்கள்.

க. எழில்பெறுமுலகேழும் தொழ எல்லாம்மினையிவ்வாழும் மறை
மொழியுமுவர் யிசைவ்மடமும்
முழங்குப்பாகப் புகையுந் சூழும்(தில்லை)

உ. ஊனப்பிறப்பிதென்று எல்லே உட்செல்ல அஞ்சி நின்று பின்பு
தேனைத்தஅன்பு தாண்டிடஅந்தத்
திருவெல்லையைக் காண்டிச் சென்று(தில்லை)

கூ.வினையுங்கிடும்புகமுண்டார் வாழ்த்தி விரும்புமிலை கண்டார் நீடும்
வளம்பதியினைச் சூழ்ந்திமைதில்
வாசலுட்செல்ல அஞ்சித் தொண்டர்தில்லை)

ச - விருத்தம்.

தில்லையினில்மறையொலியும்வேள்வியெய்யுஞ் செயலையுங்கண்டப்
பதிக்குட்செல்ல அஞ்சி, எல்லையினைவலங்கொண்டுவணங்கிநீத்தம்
இல்லைகளிப்படியேசெய்தமேன்மை, சொல்லரியநடங்காண்பதென்
வாறென்று சோர்ந்திலன்பனர்தாம்ரும்போதில், கல்லாடந்தெ
யும்பரமர்சனமின்முன்பு கண்ணினீர்ந்தவருள்பண்ணிஞேர்

ச - கீர்த்தனம் - இராகம் - கானடா - ஆதிதாளம்.

பல்லவி.

நந்தனுக்கருள்செய்தார் கன்றில் (நந்த)

அனுபல்லவி.

சிந்தைமகிழ்ந்துடன் திகிதிக்கத் தாண்டும்
இந்தப்பிறவிதடை யெனவெண்ணித் தூண்டும் (நந்த)

சரணங்கள்.

க. சந்ததஞ்சபையினில்த் தாண்டவம் புரிந்து
சிந்தைமகிழுமா தேவர் பரிந்து (நந்த)

உ. தீதுபவம்விடத் தியினிற் குளித்து
மாதவனையென்முன் வாவெனக் களித்து (நந்த)

கூ. கருத்திலில்கொண்ட சபலையை ஒழித்து
திருத்தமானவின்பந் சேரென மொழிந்து (நந்த)

ஞ - விருத்தம்.

இப்பரிசாய்க்கனவிலில்வந் தீசனருள்செய்தே
அப்பரிசேதில்லைவா ழந்தணரைத்தீவளர்க்க
செப்பிமகிழ்ந்தம்பலத்திற் சேர்ந்திடலும்விடிந்தபின்பு
அப்புடையஅந்தணர்கள் சூழ்ந்திவரையழைப்பாரே.

ஞ - கீர்த்தனம் - இராகம் - சங்கராபரணம் - மி - சாபுதாளம்.

பல்லவி.

வாரும்வாரும்எங்க ளோயசே தாய
மனத்திற்கிவானந்தஞ்சென்றித மெய்யரே (வா)

அனுபல்லவி.

ஆரும்புகழ்ம்பரனைத் தொழுது கலம்
ஆரும்புகழடைந்த நீர்நிற்கப் பொழுது (வா)

சரணங்கள்.

க. கனவினில்நடராஜர் நாடி வந்து
களித்துநின்றருளியவளத்தைக்கொண்டாடி
அனைவருமனத்தன்பு நீடி அரன்
அருளியபடிசெய்ய அடைந்தோம்நீர் கூடி. (வா)

உ. அனருநஞ்சீர டைந்தோம் எங்கள்
அகத்தினிலானந்த மிகுக்சவு கந்தோம்
பேருமைசேரும்மைய நிந்தோம் உமக்குப்
பெருகுமெவிவளர்த்துத் தாவிங்குவந்தோம் (வா)

கூ. பார்க்குள் இதுவேம நேக்யம் உம்மைப்
பார்க்கக்கிடைத்தனங்கள்பாக்யமீம பாக்யம்
ஓர்க்குங்கிடைக்குமிந்த யோக்யம் எங்கள்
அமலருளா லடைந்தீரி லாக்யம் (வா)

கூ - விருத்தம்.

அந்தணர்கோயதோயெனவழைத்திப்படியுரைக்கவாங்கதிக்கு
நந்தனர்கான்பிழைத்தேனெனப்பலியுமந்தணர்கள்காடிச்சொந்தி
வந்துவளர்த்துவர்க்கியம்பவன்பரர்தென்னிசையின்மதிற்புறத்தில்
முந்தவடைக்கெரிதன்னில் முழுகுவார்நன்னெறியில்லழுகுவாரே.

கூ - கீர்த்தனம் - இராகம் - கமாசு - ரூபகதாளம்.

பல்லவி.

தியில்முழுகினர் நந்தனர் தியில்முழுகினர்.

அனுபல்லவி.

தியுறைகையிருரைத்து திருவருள்போல நடத்தி
ஆயுமனப்பரி சுத்த அந்தணர்குழியில் வளர்த்த (தியி)

சரணங்கள்.

க. தென்றிசைவாசலினண்ணினித் திருவருள்சேர்காயம் கண்ணி
மன்றில்மனிமுரசம் பண்ணி வாழுபம்தங்களேயெண்ணித் (தியி)

உ. கழுவிடாததிருத் தொண்டு நடத்துமன்பரொரி மண்டு
குழியினேமகிழ்வொடி கண்டு குலவிச்சூழலுலவிக் கொண்டு (தியி)

கூ. பொருந்துமாயவருவோடப் புரிநூல்மார்பினில்நீட
விரிந்திடுசடைமுடி நீடவேயருருவங் கூடத் (தியி)

எ - விருத்தம்.

தியில்முழுகியெழும்பொழுது செந்தாமரைமேல்வந்தெழுந்த
தாயனாயன்போல்த்தோன்றினர் சுரர்கள்மலரின்மழைபெய்தார்
நேயமிருமந்தணர்தொண்டர் நெருங்கிச்சூழவம்பலத்தில்
போயவுடனிப்புவிதற்கமைப் பொருந்துமெவருங்கண்டிலரே.

எ - கீர்த்தனம் - இராகம் - சௌராஷ்டிரம் - மிச்ர - சாபுதாளம்.

பல்லவி.

ஒருவருங்காணுதோ வந்தவர்களில் (ஒரு)

அனுபல்லவி.

திருவருங்காணுந ஒருவர்தொண்டரை (ஒரு)

சரணங்கள்.

க. திகழ்கோவில்முனைந் செம்மை ஆகப்பணிந்து
சிந்தைதன்னில் மெய்ம்மை அன்புடனாகி
அகமிழ்துசோவில் அடைந்தவுடனே எம்மை
ஆளப்பரிவுகொண்ட காரைப்போவார் தம்மை (ஒரு)

உ. முனிமாமலர்ப் போதில் எழுந்தவேதன்
முதலாகவின் மீதில் எந்நாளினும்
ஒளிரும்அமரரய்ய உயர்காளியொடும் வாதில்
உவப்பாய்கரதாடிந்சவைக்குட்புகுந்த போதில் (ஒருவ)

கூ. பொதுவிலம்பிகை யோடும் பெருங்கருணை
புரிந்துநடனம் ஆடும் தம்பதத்தினை
நிதமும்பணியும்படி முதல்வரருளக் கூடும்
நெடும்புகழ்த்தொண்டரைநெருங்கிவந்து நீடும் (ஒருவ)

அ - விருத்தம்.

கொண்டபழையவருமாறக் கொடுத்தீமூழ்கியெழுந்தருளிப்,பண்
டைமறைமாமுனியாகிப் பரிந்தம்பலவர்பதமடைந்தார், அண்டர்புக
ழுமிவர்பதத்தையடியேன்பணிந்துதிருக்குறிப்புத், தொண்டர்செய்
தசெயலுரைக்கத்தொடுத்தேன்றுயரைவிடுத்தேனே.

திருநாவ்ப்போவார்நாயனர்புராணமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கூடு - கீர்த்தனம் - கூடு - கண்ணிகள் - உகூ.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

ஙகூவது. திருக்குறிப்புத்தொண்டநாயனர்புராணம்.

க - விருத்தம்.

தொண்டைநாட்டினிலரனேயுமைபூசிக்கச் சோழியருளாற்கம்பா
நதியில்வெள்ளம், மண்டிவர அந்தவெள்ளம்நாதர்மீது வந்துமோ
தாமலுமையவளத்துக்கொள்ள, அண்டநாயகர்மேனிகுழைந்துகாட்
டி அமர்காஞ்சிபுரத்தேகாலியர்குலத்தோர், பண்டிபுரிதவத்தினற்பி
றந்தார்மாதோர் பாதியாரடித்தொண்டுபெதியாரே.

க - கீர்த்தனம் - இராகம் - பிலஹரி - மிச்ர - சாபுதாளம்.

பல்லவி.

திருத்தொண்டுபுரிந்தாரே எந்நாளினும் (திருத்)

அனுபல்லவி.

பொருந்தமாம்புகழ்க்காஞ்சி புரத்தில் ஏகாலியர்
பொருந்துங்குலஞ்செய்தபோ பலத்தினல் புகழ்
விரிந்திடப்பிறந்திடும் நலத்தினல் அன்பு
திருந்தகாதர்மேல்வைத்த பெலத்தினல் தொண்டர் (தி)

சரணங்கள்.

க. மண்ணுலகத்தினில் கண்ணியுறுத்தருதல்
மனமுதல்மூன்றையும் மாயனர் காண
மலர்ப்பதத்தினிலென்றும் நிலைத்திடவேசெய்து
மகிழ்வடைந்திடுமிரு நேயனர் உயர்
கண்ணுதலார்தமை யெண்ணிஅகந்தையைக்
கருக்கக்கருதியஉ பாயனர் இன்பம்
பெருக்குமன்புகொண்ட தூயனர் புகழ்த்
திருக்குறிப்புத்தொண்ட நாயனர் நல்ல (திரு)

உ. புலவர்புகழுங்காஞ்சித் தலத்தில்மாவடியில்வாழ்
புரகரப்பதத்தன்பு மொய்க்கவே வாழும்
புண்ணியத்தொண்டனைக் கண்ணிற்கண்டவுடனே
போற்றியுள்ளன்புடு ஓக்கவே நலம்
சூலவிடுத்துபுரிச் திலநிய அவர்திருக்
குறிப்பறிந்துடனே அமைக்கவே அந்தச்
சிறப்பினில் அனைவரும் மெய்க்கவே திருக்
குறிப்புத்தொண்டனெப்பேர்வைக்கவே பெற்றுத் (திரு)

கூ. தொடுத்துத்தக்கன்மூன்பு கூடத்தியவேள்வியில்
அலங்குஞ்சந்திரனைத் தேய்த்திடும் பாதச்
சோதியைப்பலதுதி யோதிப்பவத்தருவைத்
தோன்றுஞ்சல்லிவேரொடுந்த சாய்த்திடும் தம்
இடத்திலடைந்தமேலோர் உயிர்த்தஉடையழுக்கை
இரியும்படிபுழுக்கித் தோய்த்திடும் செயல்
புரிபவர்போல்வெம்மை வாய்த்திடும் மலத்
திரயங்களும்அழிய மாய்த்திடும் அன்பர் (திரு)

2 - விருத்தம்.

காதரன்பரிவ்வாறுசெயும்காலித்த கண்ணிலேகண்டானருளமைழைக்
காலத்தில்..ஆதலாமாதவர்போலழுக்காங்கந்தை அணிந்தினோம்தோ
ர்நாள்வரலுமெதிர்கொண்டேத்தி, மாதவர்தங்குறிப்படையவித்தாடி
னேத்தவகையேதென்றிரங்கியிந்தக்கந்தைதந்தாற், கோதகலவெளுப்
பேனென்றன்பர்வேண்டக் கூறுவார்விடையின்றிசையேறுவாரே.

க - கண்ணிகள் - இராகம் - சுருட்டி - மி - சாபுதாளம்.

க நெடியகர்கையினிற் படியும்அழுக்கினால்
கொடுமைமனம்வெறுப் படையுமென் றுரும்

உடலினைவருத்திடும் கொடியகுளிரினில்
உடையினைவிடமாட்டேன் படியிலைக் காலும்.

உ. ஆதலினற்பகற் போதுபோகுமுன்னம்
நிலாமலர்த்தி நீர்தரு வீரா
காதலாகவென்று மாதவர்ஓதலும்
ஆதரவாயன்பர் ஓதுவர் நேரா.

கூ. கந்தையினைத்துவைத் தந்திவந்திடுமுனம்
தந்திடுவேனென வந்தனை நேரே
சிந்தைமகிழ்ந்துசெய்ய அந்தவிடந்தனில்
வந்தமாதவர்மொ ழிந்திடு வாரே.

கூ. வேகமாகப்பகல் போகுமுனமூலர்த்தி
நீர்கொடுக்காமலே எதிடில் நாளும்
வாகுறுமென்கிழுத் தேகந்தனக்கிடரும்
சோகமுஞ்செய்தவ ராகுவீர் சேரும்.

கூ - விருத்தம்.

என்றருளியந்தணனர்கந்தைகொடுத்தேகிடலுமிசைந்துதொண்டர்
சென்றுமலர்க்குளத்திலழுக்கடியடித்துப்புழுக்கியின்சிக்கரத்தில்
நன்றிபெறவேதுவைக்கப்போம்பொழுதுபரமருள்நலத்தால்மாரி
அன்றுவிடாமற்பொழிய அயர்கின்றுர்யாவரினுமுயர்கின்றாரே.

உ - கீர்த்தனம் - இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

என்னசெய்வேன் என்னசெய்வேன் என்னினார் என்றும்
இவ்வுலகத்தோர்க்குநலக என்பெண்ணினார்.

அனுபல்லவி.

முன்னம்அமரனைக்காத்த கண்டனர் அடியை
முடிமிசையணியுந்திருக்குறிப்புத்தொண்டனர் இனி(என்ன)

சரணங்கள்.

மகிழ்வுடனம்மைகந்தனை ஒருபாகம் கொண்ட
வள்ளலாரருளால்விண்ணிற் கருமேகம்
பகல்தானேஇரவோவென்று சந்தேகம் யார்க்கும்
படராமழைபெய்யக்கண்டு சந்தேகம் கடுகி(என்ன)

கடல்சூழ்மண்ணிற்பகைவர்போலிருள்விரியப் பார்த்தோர்
கண்கள்துழையாகபடி மழைசொரிய

விடுமெனப்பார்த்தும்விடக்காணுமற் பெரிய கிழ
வேதியர்சொன்னதையெண்ணிமனம் பரிய அன்பர்(என்ன)

அருந்தவர்சொல்லியவேரோ வந்துசேர அவர்
அங்கங்குளிரால்வாடுமென் றன்பு கூர
திருந்தநான்செய்யுமடிமை யொழிந்து தீர தீமை
சேர்ந்ததெனஎண்ணிவிழுந்துள்ளஞ் சோர கின்று(என்ன)

எழுந்துபோதுபோகுமுன்துவைத்தேனில்லையே வீட்டில்
எய்துங்காற்றிலேனுங்காயவைத்தேனில்லையே
மொழிந்தபடிசரியாய மைத்தேனில்லையே நான்
முழுதுமடிமைத்தொழில்சமைத்தேனில்லையே இனி(என்ன)

ச - விருத்தம்.

இந்தவாறன்பொண்ணியேகுளிரிருஞலிருந்தவர்திருமேனி
கொந்திடும்படிதிமையேசெய்தகாலையிலென்றலேதன்னைக்
கந்தைதோய்த்திடுங்கல்லின்மோதிவதேகடனென அவ்வாறே
சிந்தையன்பொடுசெயும்பொழுதினில்மகாதேவர்வந்தருள்வாரே.

கூ - கீர்த்தனம் - இராகம் - சுத்தசாவேரி - ரூபகதாளம்.

பல்லவி.

காதணிதுஞ்சியருளினர் திருத்தொண்டருக்கு (காத)

அனுபல்லவி.

மாதவர்தொழுங்கா ஒக்கலத்தில் சூருமுதலில்லிலாங்கிலத்தில்
மங்கையன்பெ அங்கணைத்திடத்
துங்கமான அ கண்குழைந்திடும் (காத)

சரணங்கள்.

க. அத்தனார்க்கிட புயர்ந்துகல்லின் மீது தலை
சிந்திடும்படிதனிவரக் கூத்தொண்டர்மோதும்போது
கந்தைதோய்க்குங்கல்லினில்நின்றுந்திருச்
செந்தளிரினு மெல்லிய ஒரு
கையைநீட்டியே துய்ய அன்பர்தந்
செய்யசென்னியைப் பையவே தாங்கி (காத)

உ வானினிறைந்தநீர்பழைபேரய் மலர்மழையெனு மிடைய ஐயர்
தேனின்இனியமொழியாளொடுந் திருவிடைமிசை யடைய
ஊனமில்லாத் தொண்டர் கோக்கி
ஆனவன்பை யவர்மேற் போக்கி

உருகியேயின்பம் பெருகியே பணிந்
தருகில்நிற்கும்போ திருகண்ணுல்நோக்கி (காத)

கூ. உனதுபுகழை யிவ்வுலகினி லனைவருமனத் தென்னி உய்ய
இனிதாயவிவித்திடவிங் கெழுந்தருளினேம் நன்னி
மனமகிழ்ந்திவ்வுலகில் நின்றும்
இனிநீநம்மூலகில் என்றும்
வந்து நாளும்பி ரிந்திடா மலி
ருந்துவாழென்று கந்து வேதத்தின் (காத)

ஞ - விருத்தம்.

அரவணிந்தவாருளியேகாம்பரமடைந்தார்
பரவுசீருள்பெற்றவத்தொண்டனாப்பணிந்து
வாமிருந்திடுந்தைதாளமுழவுலறிந்து
விரவுசீர்கொள்சண்டேசர்தம்புகழினிவிரிப்பாம்.

திருக்குறிப்புத்தொண்டநாயனுர்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கசஅ - கீர்த்தனம் - கூஅ - கண்ணிகள் - உச.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

உஅ - வது. சண்டேசுரநாயனுர்புராணம்.

க - விருத்தம்.

திருமேவியவானவர்க்கிடரே செய்யுங்கொடியவெம்மாய
உருமேவியநீள்வரைகிழிய ஒளிரும்வேலின்றிறங்காட்டி
மருமெவியகற்உடம்பணிந்தோன் மகிழ்ந்திருச்சேய்கல்லூரிற்
பெருமாதவர்தந்திருக்குலத்திற் பிறந்தார்அறிவிற்சிறந்தாரே.

க - கீர்த்தனம் - இராகம் - கல்யாணி - ஆதிதாளம்.

பல்லவி.

அவதாரஞ்செய்தார் சண்டேசர் (அவதா)

அனுபல்லவி.

புவனத்தினிலிருக்கும் தவசிகள்முன்செய்த
புண்ணியமுழுதுமே நண்ணியவடிவென
விண்ணினிலமரும் எண்ணிமகிழ்த்திரு (அவதா)

சரணங்கள்.

க. சோழநாட்டிலுலகம் ஏழினும்மேன்மை உதிக்கத்
துலங்கும்மண்ணித்தென்கரைக் கலங்காரமாய் மதிக்கச்

சூழுமறைப்படிசெய் வேள்விப்புகை கதிக்கத்
தூயமறையவர்கள் நேயமுட னிதமும்
வாய்மைவிளக்குமுயர் சேய்கல்லாலில்திரு (அவதா)

உ. வளங்கொள்காஞ்சிபோந்தம் மகிமைபெறமண் மேலே
மருவிருவினைக்கும்ழர் உருவெடுத்துத்தன் னுலே
விளங்குமணியைக்கந்தும் வெல்விடமும்ழர் பாலே
மெத்த வுமிழுமா வொத்தசெயலினைச்ச
தத்தன்மணஞ்செய்தபவித்திரைதல்வயிற்றில் (அவதா)

கூ. வேதத்துறைவிளங்க மேதினியெல்லாம் விளங்க
வேதியர்குலத்துக்கெப் போதும்வெற்றி விளங்க
ஆதிபரன்சைவவி பூதியென்றும் விளங்க
அண்டர்புகழ்ந்திருத்தொண்டர்குலங்களின்பம்
அண்டமிகவும்புகழ் கொண்டுவிளங்கத் திரு (அவதா)

உ - விருத்தம்.

அண்ணலாரவதரிக்கமகிழ்ந்துதாதை அழகுபெறுவிசாரசர்மனெனப்பேர்வைக்கஉள்ளும்வயதைந்தில்மறையாகமங்கள் நற்கலைகள் முழுவது முன்னுணர்வாலோர்ந்தும், வண்ணஅரும்பலருமுன்னமணமுட்கொள்ளும்வகைபோலவெளிவிடாதிருந்தேழாண்டில், திண்ணமிகஉபயனங்தைசெய்து பிறந்தமறைபொழுவிக்க அமைத்திட்டாரே.

உ - கீர்த்தனம் - இராகம் - பியாகடை - ஆதிதாளம்.

பல்லவி.

உணர்ந்தார்திருமைந்தர் உண்மைப்பொருளே (உணர்)

அனுபல்லவி.

குணந்திகழ்மறைகளை உணர்ந்துவந்தனர் நலம்
அணங்கிடமனமகிழ் வினைந்துகொல்லியபடி (உணர்)

சரணாகதன்.

க. மறைகள்முழுதும்நலம் உறையாகமங் கருதும்
நிறையுங்கலையினைத்துங் குறைவில்லாமல் பிற (உணர்)

உ. அந்தணர்களும்பெற்ற தந்தையு மைகர்த்தம்
சிந்தைத்தெளிவைக்கண்டி கர்த்தி சரித்திட (உணர்)

கூ. திடமானகலைகளின் முடிவானபொருண்மணில்
நடமாடுமையர்திரு அடியாரெனக் கருத்தில் (உணர்)

கூ - விருத்தம்.

உள்ளபடியுணர்ந்தொருநால்மறையோதுமைந்தர்களோடுற்றபோது துள்ளுபசுக்களையோட்டிச் செல்லுமிடையனையதிலோர்சுரபிமுட்ட எள்ளளவுங்கூசாமல்அவன்தடியா லடித்திடக்கண்டெம்மையாளும் வள்ளலார்விலக்கியிவைவருகுகின்றீரென்னிடைச்செருக்கின்றீரே

கூ - கீர்த்தனம் - இராகம் - சுரஹரப்பிரியை - மி - சாபுதாளம்.

பல்லவி.

ஆவின்பெருமையை ஆய்ந்தறியாயோ
தேவர்புகழ்மிதன் சீர் குறியாயோ (ஆவின்)

அனுபல்லவி.

ஜீவராசிகட்கெல்லாந் திகழ்மேன்மை நிறையும்
மேவுந்தீர்த்தங்களெல்லாம் விரும்பிவர் துறையும் (ஆவின்)

சரணங்கள்.

க. மங்கலமாமிதை வளர்ப்பதிற் புண்ணியம்
பொங்குமென்றெண்ணவே பொருந்தும்லா வண்ணயம்
துங்கமுனிவரண்டர் தொகுதிகள் சூழும்
அங்கமனைத்துந்தான் அடைவதாய் வாழும் (ஆவின்)

உ. நடனஞ்செய்பரனுருநறுங் கொன்றைத்தொடையும்
தடமதியுங்கியுஞ் சந்தமா அடையும்
முடியில்மஞ்சனம்புரிந் திடப்பஞ்ச கவ்யம்
வுடிவாயுதவுமிதை விடவுண்டோ திவ்யம் (ஆவின்)

கூ. வாசவன்அமரர்கள் மருமலர் வேதன்
கேசவன்தொழவெள்விக் கிரியில்லாம் காதன்
பூசும்நீறுகரும் பொருள்தன்பால் உதிக்கத்
தேசுபெறுமிதைப்போற் செகத்துண்டோ மதிக்க (ஆவின்)

ச. பூதகணங்கள்சூழப் பொதுவினில் ஆடும்
ஆதிபரமன்றனை அம்மைகை யோடும்
மேதகவேவாங்கும் விடைத்தேவர் சொந்த
ஜாதியென்றுற்சொல்லுங் கருதிலோ இந்த (ஆவின்)

கூ. ஒருதரம்பார்த்தாலும் வருவினை போமே
திருமையிலுமவர்க்கே பெருமையுண்டாமே
அருமையாமிதையடிக் கடுங் கல்லுகடையா
தருமமாமிமையா உரையடா இடையா (ஆவின்)

சு - விருத்தம்.

சினமிருமாயன் சிந்தைதிருந்தக்
கனிவுறுமன்பாற் கழலினான்மேல்
மனமிருகாதல் வளர்ந்திடப்பின்னும்
புனிதர்புகன்றூர் புகழ்பெறநின்றூர்.

சு - கீர்த்தனம் - இராகம் - பந்துவராளி - திரிபுடதாளம்.

பல்லவி.

நானேயினிமேய்த்திடவே சென்றூர்
நல்லவர்தொழ நின்றூர் (நானே)

அநுபல்லவி.

ஆனேற்றினர் சினந்த நலங்களோ
அகங்கொண்டவர் பசுவின் குலங்களோ (நானே)

சரணங்கள்.

க. மெய்யர்ச்சனை செய்திடு சுதனல்
வெகுள்காலனை உதைத்தருள் பதனல்
எய்தும்பல மெய்திடும் இதனல்
என்னுந்திட மன்னிய அதனல் (நானே)

உ. திருவுன்களை வருத்திடில் அழிவார்
திடமிதெனை அடிக்கடி மொழிவார்
இருகண்புனல் பெருகிடப் பொழிவார்
இடராம்பவத் தொடரினை ஒழிவார் (நானே)

ரு. ஆனினங்க ளானவை வாடா
அன்புசெய்யில்த் தன்பங்கள் கூடா
தானையாடிக் காலுல மோடா
கடையில்லை இடையா போடா (நானே)

டு - விருத்தம்.

என்றன்பரியம்பவனக்கியெழுந் திடையான்வெருவிச்செலநின்ற
வருஞ், சென்றந்தணர்முன்புடன்தகனைத் தெரிவித்தினிமேய்ப்பது
நானெனலும், கன்றென்றவர்யாருமிசைந்திடவே காடுஞ்செயல்க்
டிடவைம்புலனே, வென்றின்புறுமைந்தாமகிழ்ந்தாநல பிருமாண்
மைமேய்க்கநடந்தனரே.

டு - கீர்த்தனம் - இராகம் - பைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

பசுக்குலங்களை ஆ கரித்தார் இக்கா
பார்முழுதுய்ய அவ கரித்தார்.

அநுபல்லவி.

இசைக்கும் மறையனைத்தும் படித்துக் கரத்
தினிற்கயிறொடுத்தடி பிடித்து நலமாகப் (பசு)

சரணங்கள்.

க. வரப்புவெளியில்விட்டு மேய்ப்பார் அச்சம்
வாராமல்நடந்துமுன் வாய்ப்பார் மண்ணிற்
திரைப்புனலில்விடுத்துத் தேய்ப்பார் என்றன்
திவினையனைத்தையும் மாய்ப்பார் இப்படிப் (பசு)

உ. பதிகைக்கரைகளிலே விடுப்பார் புல்லைப்
பறித்துப்பறித்துவாயிற் கொடுப்பார் வெய்யிலில்
கடுகிமாநிழலில் அடுப்பார் தண்ணீர்
காட்டிச்சொரிந்திளைப்பைத்தடுப்பார் இப்படிப் (பசு)

ரு. குடுமிமுடிச்சவிழ்ந்து சூலைய அரைக்
கோவணமுங்கயிறும் உலைய மான்தோல்
இடுமுப்புரிநூல்புரண் டலைய மனைத்
தின்பம்நிறையத்துயர் தொலைய அனுதினம் (பசு)

ச. காலந்தவறுமலே பார்த்து பால்
கறக்கவிடுதொறுஞ் சேர்த்து வாயால்
சாலவுஞ்சிவனென ஆர்த்து காலையில்
சமித்திறும்செயுங்கடன் தீர்த்து மகிழ்வுடன் (பசு)

சு - விருத்தம்.

நலம்பெருகப்பயிருக்குமழைபெய்தாற்போல்நாடியிவர்பசுக்குல
த்தைமேய்க்கஆவின், குலம்பெருகிவளருகலாலழகாய்மூன்று கொ
டுப்பதினும்அனேகமடங்குதிகம்பாயின், பலம்பெருகவேள்விபுரிம
றையோர்வேதம் பகர்மைந்தன்மேய்ப்பதுவேகன்றென்றுரித்,தலம்
பெருகவந்துநித்தார்,தம்மேலன்பு சார்ந்திடஆனினங்கள்களிகூர்ந்த
தன்றே.

சு - கீர்த்தனம் - இராகம் - சுருட்டி - மிச்ர - சாபுதாளம்.

பல்லவி.

இந்தமைந்தர்தமைச் சந்ததங்கண்டுமே
கிழந்திடும்பசுக்குலங்கள்.

அநுபல்லவி.

அந்தமில்லாமல்நி றைந்திடும்முயிரெல்லாம்
அளவில்லாத தய்ய கவங்களோ

உளமகிழ்ந்து செய்ய அதன்பயனை
வெளிவந்தாற்போல் உய்ய அவதரித்த (இந்த)

சரணங்கள்.

க. கட்டுத்தறியினை விட்டவிழ்த்தவுடன்
கன்றையும் நினையாவே சுற்றிச்சுற்றி
நின்றுமுன் கனையாவே வேறுசெயல்
ஒன்றினும் முனையாவே இவ்விதமாய் (இந்த)

உ. வந்திவரிடத்தில டைந்தவுடனேதம்
மடிப்பாலைச்சொரிந்திடுமே கலம்நிறைய
இடத்தே புரிந்திடுமே சுற்றுச்சுற்றி
கடுத்தே திரிந்திடுமே இவ்விதமாய் (இந்த)

ங. மங்கலமாகிய தங்கன்றைவிடமெலாய்
மனமில்லை மதித்திடுமே இருகண்ணில்
புனல்விழ உதிர்த்திடுமே மகிழ்ந்திவர்
முனம்நின்று குதித்திடுமே இவ்விதமாய் (இந்த)

ச - விருத்தம்.

காவும்பசுக்கள்கன்றுபிரிந்தாலுஞ்சிறியமறைக்கன்றை
மேவியருகிக்கனைந்துமடிமிகப்பால்சுரந்துபொழிந்திடலும்
ஆவுடன்கண்டுணர்ந்திதைகம்அரனுக்கேமஞ்சனமாட்டிச்
சேவைசெய்யாவேண்டுமெனச்சென்றார்நெறியில்நின்றாரே.

எ - கண்டகம் - இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பாசவினைகளென்னும் மாயினையொழிப்பவர்
தேசுறுபசுக்களோ ஆசையுடனாக்கி
வாசமிகுமலரைக் காசொடுமணிகளோப்
பூசலொடுமேலைகள் வீசுமன்னிக்கையில்
நேசமாசமுண் வாசனையால்த்தில்லை
வாசனையன்பர்விச் வாசனைத்திருகட
காசனைவிடுப்படி நாசனச்சுயம்பிர
பூவுலகத்தவர் பூசனைசெயலுற்றார்
யாவருந்தொழப்பெற்றார்.

அ - கீர்த்தனம் - இராகம் - கருபார் - ஆதிதாளம்.

பல்லவி.

பூசனைபுரிந்தாரே விரிசடைப்படி (பூசனை)

அநுபல்லவி.

மாசில்லாமண்ணிலந்திக் கரைமனையினில்கல்ல
வாசனைதிசையெங்கும் வீசுமாத்தியின்கீழ்
நேசமுடனே ஐக தீசனுக்கனுதினம் (பூசனை)

சரணங்கள்

க. சூழுமணல்லிங்கமதில் வகுத்துக் கோபுரமும்
சுற்றுக்கோவில்களும் பருத்து கடவில்
வாழும்விமானமொன்று தொகுத்து அதற்குள்
வாசம் புரிந்திட ஆசனமு மியற்றித்
தேசுறுமணலினில் ஈசனுரு வமைத்துப் (பூசனை)

உ. கவருடங்களோக்கையால் எடுத்து வந்துமுன்
கல்லபசுக்கள்பால் கொடுத்து நின்றிடச்
செவ்வண்மணற்கோவிலில் அடுத்து வைத்துக்
திருந்திய பலமலர் பொருந்துவ தெடுத்தான்
சிவந்தனில்நிறைந்திடப் பரிந்தருச்சனை செய்து (பூசனை)

ங. பரவிப்பாலின்மஞ்சனஞ்சொரிந்து செய்பூசையைப்
பாமனர்மகிழ்ந்தனர் பரிந்து கிட்டாத
பொருளையன்பால்நிறையப்புரிந்து திருவாழ்
பொருவிலொளியைநினைந் துருகியுருகி கல்ல
திரிகரணமு மொன்றாய் மருவிடவேயிருந்து (பூசனை)

அ - விருத்தம்.

மைந்தனரிப்படிச்செய்பூசைக்கென்றும் மகிழ்ந்துகுடங்குடமாக
ப்பால்கொடுத்தும், அந்தவினைங்களுறையாமல்முன்போல்அந்த
ணர்தம்மனையினும்பால்கொடுக்கும்நாளில், எந்தையார்செய்கையை
க்கண்டொருவன்பூசை யென்றறியாதந்தணர்கட்குரைத்தான் அன்
னோர், சிந்தியாதெக்கியதத்தனையழைத்துச் சிறுவார்இவ்வண்ணங்
கூறுவாரே.

கூ - கீர்த்தனம் - இராகம் - கேதாரம் - ஆதிதாளம்.

பல்லவி.

அந்தணனேயுன் மைந்தன்செய்கையை
அறிந்திடக்கேளாயோ.

அநுபல்லவி.

பந்துஜனங்களெனச் சிந்தையினி லுணர்ந்து
பார்க்கிலன்உடலுக்குள்நாக்கைவளைப்பதுபோல் (அந்)

சரணங்கள்.

க. விளங்குமேய்ப்பவன்போல் வளம்பெறப்பசுக்களைக்
களங்கமில்லாமல் மேய்த்தான் பின்பு
விடுத்துக்குளிர்ந்தநீர்த் தடத்திலழுக்குநீக்
கிடத்தினமுந் தேய்த்தான்
வளர்ந்திடும்பயிருக்குக் கிளர்ந்துபொழியமழை
வாய்ப்பதுபோல் வாய்த்தான் தன்
மனந்தன்னில்வேறொன்று நினைந்துநல்லவன்போல்
வலியவந்தெங்களைப் பலசொல்லியேய்த்தான் (அர்)

உ. வந்தபசுக்களைக் கறந்து குடங்களில்நி
றைந்திடப்பா லெடுத்தான் அதை
மண்ணிநதிக்கரையில் வெண்மணலிற்கொடுமை
எண்ணிசிதறி விடுத்தான்
அந்தணர்வேளவிக்க மைந்திடும் பாலைய
கந்தையினற் கெடுத்தான் நெஞ்சில்
அனைவருமுலகினிற் கனவிலும் நினைந்திட
அடாதசெய்கையை விடாமல்த் தொடுத்தான் (அர்)

கூ. வடிவாய்மேய்த்திடும் இடையன்செய்யுந்தொழில்
கெடுகலென்றே பணித்தான் கபடமாய்
வாட்டமில்கலம்பா ராட்டிச் சோறதனைக்
காட்டிக்கவியைத் தினித்தான்
தடையில்லாமற்பால் கொடுத்திடும் வளங்களை
யிடையூறுய்த் கனித்தான் நிப்படித்
தான்புரிந்திவ்வகில மேன்மையோ எங்களைச்
சாலவும்மசகம் போலவே கனித்தான் (அர்)

கூ - விருத்தம்.

நிறையும்வேதியரில்வகையியம்பலும்நின்றோன்
நிறையும்ஞானநியேனினிச்செயிற்குற்றமெனைதாம்
பொறையுளீரெனப்போற்றியேயிடைகொண்டுபுறப்பட்
டுறையுந்தன்மனைக்கடைந்தனனுடைந்தனனுள்ளம்.

க - கண்ணிகள் - இராகம் - தோடி - ஆதிதாளம்.

கூ. அந்தணன்அந்திப னிம்புடன்தந்துதன்
அகந்தனில் வந்தானே இந்த

அவச்சொல்லைக்கேட்கவோ அவதரித்தேனென்
றகந்தனில் நொந்தானே.

உ. திருமிகுமைந்தர்தம் அரியமுகத்தைத்
திரும்பியும் பாரானே அவர்
சிந்தையிற்சிவனெனி னேந்திமேன்மைத்
திறத்தையும் ஓரானே.

கூ. உலகினிலெவர்பகை கலந்திருந்தாலும்உள்
ளூர்ப்பகையெனக் காமோ இங்
குறையும்பெருந்தவ மறையவர்கோபம்
உற்றுல்வீண் போமோ.

சு. மாதவவேதியர் சாதியிலில்லா
வழக்கத்தைத் தொடுத்தானே அந்த
வழக்கத்தைமுழுக்கவும் ஒழுக்கமாய்நடத்தாமல்
பழிக்கிடங் கொடுத்தானே.

எ. என்னிவனிருந்திட அன்பிசவிடிய
என்றும்பாலைத் காலே எழுந்
திலங்கும்பசுக்களொடும் நலங்கொள்மைந்தருமண்ணிக்
கெய்தினர்அந்த வேலே.

சு. தந்தைமறைந்தி தயிந்திவேனெனச்
சிந்தையெண்ணங் கொண்டான் தொடர்ந்து
தடந்தனில்வாழுண்பு நடந்துசிவார்ச்சனை
தயார்செய்யக் கண்டான்.

க0 - விருத்தம்.

ஒளித்தவன்குராமரத்தின்உச்சியிலேறிப்பார்க்கக்
களித்திவர்பசர்க்குப்பாலின்மஞ்சனமாட்டக்கண்டான்
உளத்தினில்முளிந்துமண்பாய்ந்தோடிவந்தன்பர்பூசை
வளத்தையெண்ணுதடிக்கமைந்தருமுணர்கிலாரே.

க0 - கீர்த்தனம் - இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

அடித்ததையுணராரோ தம்மைத்தந்தை (அடித்)

அனுபல்லவி.

அடிக்கடிவாயினை மடித்துப்பல்லொடுபல்லைக்
கடித்துச்சினந்துதடி துடித்துவெய்யவுரை

படித்துக்கையில்தடி பிடித்துவானின்இடி
இடித்தெனமுதுகு தடிந்திடத்தம்மை (அடித்)

சரணங்கள்.

க. அரகரசிரதர திரிபுரகாமத
கரவரசுரநதி தரவெனஇருதயம்
உருகிப்பழையபண்பு பெருகிப்பெருகியெழத்
திரிகரணமும்ஒன்றுய் மருவியதனால் (அடித்)

உ. அடித்துமலரர்ச்சனை தொடுத்துப்புலியின்தோல்
உடுத்தபரன்முடியில் எடுத்துமஞ்சனப்பால்
விடுத்திடக்கண்டதைக் கெடுத்திடப்பால்வைத்த
குடத்தினைக்காலா லுடைத்திடும்வரைக்கும் (அடித்)

கக - விருத்தம்.

ணைத்தரிவ்வாறிருந்தபிஷேகஞ்செய்போது மறையவன்பாற்குட
ங்களைக்கலாலுடைக்கத், தந்தையெனவறிந்துமவன்கால்கவ்விழுத்
தநயர்கோலஞ்சுக அகமழுவதாக, அந்தமழுவினையேபெயத்தான்தன
ற்றைஅவன்விழுந்திதகன்றாசசனைக்குமைத்தார், கிங்தமகிழ்ந்தெ
ழும்பொழுதந்தரத்தெம்மானைத் தெரிசித்தாரொன்றுளத்தில்உருசித்
தாரே.

கக - கீர்த்தனம் - இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

பல்லவி.

தரிசனஞ்செய்தாரே கண்ணாரத் தரிசனஞ்செய்தாரே.

அனுபல்லவி.

தரிசனஞ்செய்ததி புரிசண காதியர்
தரிசனையன்பால் (தரிச)

சரணங்கள்.

க. பூதகணங்கள்சண காதர்பூதலோரிரு
புடையும்நெருங்கிச் சூழப் பல
மாதவர்சிவனென ஓதியோதியின்ப
வாரிதியினில் ஆழ
மாதவன்பங்கனன் ஆதியவானவர்
வாழ்த்திமகிழ்ந்து தாழ நல்ல
வேதமுரைத்துதிசெய்ய காதலாவிடைமிசை
மாதுமையவளொரு பாதியில் வாழத் (தரிச)

உ. தும்புருநாரதர் இன்பவிணையொடு
தொடர்ந்துகீதம் பாட நல்ல
செம்பவளஇதழ ரம்பையர்திருமுன்பு
திவ்யநடனம் ஆட
மொய்ம்புமுனிகாதமெ ழும்பஞ்சதந்துபி
முழக்கமெங்கணுங் கூட உயர்
அம்பரத்தோர்பொழி யும்பெருமலர்மழை
அம்புவியெங்கும்நி ரம்பியே மூடத் (தரிச)

ஈ. மதியும்அரவுங்குளிர் நதியுங்கொன்றையுமென்றும்
வளர்சடையொளி வார மலர்
விதிமுதலமரர்கட் கிதஞ்செய்கனத்திற்கரு
ணைன்னெளிமிக ஆர
கதிர்செய்மேற்றினெளி துதஞ்லுதுக்கமற்ற
காசவடிவு கூர நம்மன்
பதறவும் ராவணன் கதறவுஞ் சக்திரன்
சிதறவுஞ்செயும்பதத் தநிபர்முன் சேரத் (தரிச)

கஉ - விருத்தம்.

பத்திமுதிர்ந்திடுபாலகிரிவ்வகைபரனைத்தரிசித்தே
சித்தமகிழ்ந்துருகித்துதிபற்பலசெப்பிமிகப்பணியும்
அத்தருனத்திலெடுத்துமழித்துதம்அன்பரைநோர்நோக்கி
மதீதகயத்தையுரித்தவர்தந்திருவாய்மலர்ந்தருள்வாரே.

கஉ - கீர்த்தனம் - இராகம் - அடாணை - மி - சாபுதாளம்.

பல்லவி.

சண்டேசனும்பதத் தந்தோமென்றேயன்பு
கொண்டீசரருள்புரிந்தார்.

அனுபல்லவி.

தண்டாமரைமலர் நேர் தங்கையினல்த் தொடலும்
தங்குஞ்சிவமயமா யங்கமடைந் திடலும் (சண்)

சரணங்கள்.

க. பூசைக்கூறுசெய்த தாதைதாளற வீட்டிப்
பொருந்தகம்மேலன்பு புரிந்தாயென்றுபா ராட்டி
பூசையாயுச்சிமோந்து தாதைதாமென நாட்டி
அணைத்துக்கொன்றைமாலையையழகாயவர்சூட்டிச் (சண்)

உ. அண்டர்புகழ்ந்திருக் தொண்டர்களுக் குரிய
அதிபராக்கிச்சூடு வதுவும்உளம் பரிய
உண்டகலமும்உடுப் பதுவும்யார்க்கு மரிய
உனக்கேதகுந்தது மெனமயிழ்ந்து பெரிய (சண்)

கூ. வானினிலமரர்கள் மருமலர்மழை பெய்ய
மலர்விதிமுகிலோர்கள் இதமாய்த்துதிகள் செய்ய
ஞானமுனிவர்சாம கானமுழக்கத் தைய
நலங்கொண்டதிருத்தொண்டர்குலங்கள்விளங்கியுய்யச் (சண்)

கஉ - விருத்தம்.

விடைமேலடைந்தாரருள்செய்யவினங்குங்கணங்கள்போற்றிடஅவ்
வுடலோடஞர்பாலகராயுடனேதாமுந்தொழுதணைக்கார்
படியோரதியப்பிழைபுரிந்தும் பாலர்மாழவாற்பிழைநீங்கி
நெடிதாஞ்சுற்றத்தொடுந்தாதை நிமலருலகத்தழுக்கானே.

கச - விருத்தம் - சுந்தாமூர்த்திசுவாமிகள் - துதி.

செம்மானுடையாரடியார்கஞ்சேர்த்திகன்னையாருமிர்
திம்மாயப்பொய்ப்பிபலமொழியிசைசேர்தொண்டத்தொகைபாடிப்
பெம்மான்றண்ணீர்ப்பாலைபாற்பெயர்த்துந்துசெலவிடித்த
எம்மான்மலர்த்தாள்களோப்பனிய இனைக்கும்பிறப்பைவணங்குவாம்.

மூம்மையாலுலகாண்டசருக்கம்முற்றிற்று.

ஆகிருவிருத்தம் - கஉச - கீர்த்தனம் - கசக - கண்ணிகள் - உஇ.

திருச்சிற்றம்பலம்.

கூ

திருச்சிற்றம்பலம்

ச - வது. திருஞான்சருக்கம்.

உகவது. திருநாவுக்கரசுசுவாமிகள்புராணம்.

க - விருத்தம்.

நலத்தில்விளங்குமுனைப்பாடி நாட்டில்திருவாமூர்வேளாண்
குலத்தில்விளங்குகுருக்கையர்கங் குடியையிளக்கும்புகழனார்
நிலத்தில்விளங்கும்புகழ்மிகவே நிகழும்நாளிற்சைவநெறி
தலத்தில்விளங்கும்படியாகச் சனித்தார்எவர்க்கும்இனிதாரே.

க - கீர்த்தனம் - இராகம் - மோகனம் - மி - சாபுதாளம்.

பல்லவி.

அவதரித்தாரே மருள்நீக்கியார் அவதரித்தாரே.

அனுபல்லவி.

புவனத்திற்கலிகளின் புகழ்சேர்துறை தழைக்கப்
பொருந்துமருந்தவர்தந் திருந்தும்நெறி பிழைக்க (அவ)

சரணங்கள்.

க. திகழ்வேளாண் குலத்தில் விருந்தளித்துச்
சிறக்கஇந் நிலத்தில் அவதரித்த
புகழனருமவர் மதிழ்வாய்மணம் நலத்தில்
புரியும்மாதினியாரும் புரிந்ததபோ பலத்தில் (அவ)

உ. வளர்முக மதியார் கற்பினிற்புகழ்
மருவருந் தனியார் போலவேநலம்
ஒளிர்மாதினியாரிடத் துயர்திலத வதியார்
உதித்தச்சிலவருஷம் ஒழியக்குண நிதியார் (அவ)

கூ. அகிலத்தில்தன் றும் இருள்களெல்லாம்
அகன்றுபோய்க்குன் றும் படி யுதிக்கும்
பகலவன்போலவே அகவிருளொழிந் தென்றும்
பாருய்யமாதினி யார்தம்வயிற்றில் நின்றும் (அவ)

உ - விருத்தம்.

காதலனருகித்திடலுஞ்சிறப்பாகச்செய்வதெல்லாங்களித்துப்பெ
ற்ற, தாதையார்செய்துமுவாண்டுதனிற்சவளமுமேதகவேசெய்ய
ஓதுகலையனேத்துமறிதிளம்பிறைபோல் மைந்தர்வளர்ந்துறும்நாள்
தன்னில், தீதில்கலிப்பகையார்க்குத்திலதவதியாரைமணஞ்செயநே
ர்ந்தாரே.

உ - கீர்த்தனம் - இராகம் - சாவேரி - ஆதிதாளம்.

பல்லவி.

கலிப்பகையாருக்குத் திலதவதியார்தம்மைக்
கலியாணஞ்செய்யஇசைந்தார்.

அனுபல்லவி.

ஒலித்திடுங்கடல்சூ ழுலகிற்புகழ் கதித்த
உத்தமமாம்வே ளாளர்குலத் துதித்த (கலி)

சரணங்கள்.

க. சிரத்தினிலொருபெண்ணும் தேகத்திலொரு பெண்ணும்
சேர்த்தவர்பதங்களே மெய்யன்புடனே யெண்ணும்

விருப்பினர்சோழமண் டலத்தரசாகுஞ் பண்ணும்
வேந்தனிடத்திற்சே னதிபதியாய் நண்ணும் (கலி)

உ. சீரமைந்தகலிப் பகையாருயர் மதி
சேர்ந்தவரைவிடுக்க அவனந்திலத வதி
யாரைவந்துகேட் டிடலுமனஞ்சம் மதி
அடைந்துபுகழனு பெனும்பெருங்குண நிதி (கலி)

கூ. திகழுஞ்சுவைமதுவை யுண்டுதிரண்டு வண்டு
செறியுங்கொன்றையணி சிவனிடத்தன்பு மண்டு
புகழனுருத்மக் 'கிசைருலத்தையுங் கண்டு
பொருந்தியபெருங்குணச் சிறப்பையுமனங் கொண்டு (கலி)

கூ - விருத்தம்.

புகழனரிசைந்துரைத்திடக்கேட்டவர்போய்க்கலிப்பகையார்க்கு
மகிழ்வினைதருமவர்மணஞ்செயுமுனம்மன்னவன்தன்னோடு
பகைசெயுத்தாதேசமன்னனேவெல்லப்பரிந்திவர்தமையேவத்
திகழ்கலிப்பகையார்பலபடையொடுசென்றுபோர்செயும்காளில்.

க - கண்ணிகள் - இராகம் - காம்போதி - ஆதிதாளம்.

க. அந்தநாளில்இங்கே புகழனர்நிலையாமை
யாமிவ்வுலகை விடுத்தார் உயர்
அந்தரலோகத்தை அடையமாதினியாரும்
அவருடனே அடுத்தார்.

உ. மாதாபிதாஇறக்கத் திலதவதியாரொடும்
மருணீக்கியார் வருந்தி மன
மீதானதுன்பத்தில் அழுந்தியுறவோர்தேற்றும்
விதத்தினுல்மனந் திருந்தி.

கூ. செய்புங்கடன்கள்செய் திருந்தார்முன்புவட
தேசத்திலும் பகையார் உடன்
வெய்யபோர்செய்துயிர் கொடுத்துப்புகழ்மிகவும்
மேவினர்கலிப் பகையார்.

ஈ. அந்தவார்த்தைதிலத வதியார்கேட்டலுனந்தங்தை
அவர்க்குக்கொடுத்தத் தேவினர் நிதனுல்
இந்தஉயிரையவ ருடனேசேர்ப்பதல்லால்
இனியிரேனென்று கூறினாள்.

ரு. இன்னவிதமாய்த்துணிந்திசைத்தவார்த்தையைக்கேட்
டிளையவர்விரைந் தெழுந்தார் நான்
என்னசெய்வேனென வருந்தித்தமக்கையார்
இணையடிகளில் விழுந்தார்.

சு. அன்னைதந்தையிறந்தும் உமைத்தொழப்பெற்றதனல்
ஆருயிருடன் இருந்தேன் நீர்
என்னைத்தனியாய்விடுத் தேகினல்நர்வுமுயிர்
இழப்பேன்இருக்கப் பொருந்தேன்.

எ. என்றுபுலம்பிட்டும் இளையவர்வளமாய்வாழ்ந்
திருந்திடப்புவி மேலே அவரும்
அன்றுமுதலாய்த்தாலி தாங்காமலில்லறஞ்செய்
தமர்ந்தார்பரிவி னலே.

அ. உலகம்நில்லாதென்றெண்ணித் தம்பியார்நிதியார்க்கும்
உதவிருந்தும் அளிப்பார் குளம்
மலருஞ்சோலைதாமச் சாலைதண்ணீர்ப்பந்தல்
வைத்துமனங் களிப்பார்.

கூ. நல்லசமயம்எதென் றெண்ணுமீசருள்
நல்காததனும் சமணர் / மதத்தில்
செல்லவெண்ணிப்பாடலி புக்ககரிலிவர்
சேர்லுமந்த அமணர்.

ஈ. தங்கள்நூல்கோச்சொல்ல இவரிந்திடமேலாம்
தருமசேன ரென்ன நாமம்
அங்கவர்வைத்திடத் தேரரைவாதில்வென்
றமர்ந்தார்தலைமை மன்ன.

கூ - விருத்தம்.

தம்பியாரும்பொய்யமணர் சமயமுத்திகருமென்றே
தம்பியார்வமுடனிருக்கும் நண்பைத்திலதவதியார்கேட்,
டெம்பியார்க்கிம்மதியுதித்த தென்னென்றயர்ந்துதிருவதிகைத்
தும்பியார்க்குங்கொன்றைபுனை சோதியார்க்குத்தொண்டுசெய்வார்.

கூ - கீர்த்தனம் - இராகம் - சேதாராகவுள் - ஆதிதாளம்.

பல்லவி.

திலதவதியார் திருத்தொண்டுபுரிந்தார்
நலமானகுணநிதியார்.

அனுபல்லவி.

இலகியதம்பியார்மேம் குலவனவைத்ததாய வால்
இன்னுயிர்தாங்கியே இங்கிலத்திலிருக் கும் (திலத)

சரணங்கள்.

க. திகழுமுறவாங்கொடர் பொழிந்துதூயபுகழ்ச்
சிவகெறிபெற எண்ணி கலமானீர்
மிருகெடிலநதியின் வடபால்த்திருவதிகை
வீரட்டானம் நண்ணி யுலமாய்வந்து
மகிழ்டன்முப்புரத்தைப் புன்சிரிப்பாலெரித்து
மதுவார்கொன்றைக் கண்ணி இளஞ்சந்திரன்
புகழ்சேர்கங்கையணியும் வீரட்டானேசரைப்
போற்றித்துதிகள் பண்ணி நீங்காமலே (திலத)

உ. என்றும்அந்தத்தலத்தில் இருந்துசிவச்சின்னம்பூண்
டெழுந்துவிடியும் முன்பு கோவிலினில்
சென்றுதிருவலகாற் பெருக்கிக்கோமயத்தினால்
திருமெழுக்கிட்ட பின்பு அப்போதலர்ந்த
நன்றிசேர்மலர்கொய்து திருமாலைதொடுத்து
நயமாகக்கொடுத் தென்பு கரைந்திட
நின்றுதோத்திரங்கள் செய்துவிரட்டேசரை
நினைந்துநினைந் தன்பு பெருகிடவே (திலத)

கூ. கருவிடத்தினாலுண்டு பசியைத்தீர்க்கநெஞ்சில்
கருதுதல்போல் நினைந்து முத்தியைச்சேரப்
பரசமயத்தில்த்தம்பி சேர்ந்தானென்றெண்ணிக்கண்ணீர்
பாயவுடம்பு நனைந்து விளக்கிருக்க
இருளைக்கருதிமெய்ப்பொய்ச் சமயக்குழியில்விழுந்
திடர்மனத்தினிற் புனைந்து வாடுந்தம்பியை
அருளாலேதடுத்தாள்வாய் பரமனேயென்றுதிரு
அடியைநெஞ்சினில் வனைந்து தினந்தினமும் (திலத)

நி - விருத்தம்.

சங்கரர்க்குத்தபோதனியார்தொண்டுசெய்து தம்பியையாண்டரு
ளுமெனப்பலரிய அந்த, மங்கையார்கனவிலெழுந்தருளிநீயுன்மனக்
கவலையொழியுன்னோடிருக்கோன்முன்பே, அங்கெமைச்சேர்ந்திட
முனியாய்த்தவங்கள்செய்தா னவனைநாஞ்சூலவிடுத்தாள்வோமெ

ன்று, வெங்கொடுஞ்சூலையைப்பரஞ்சோவலோடும் வெருவினர்ச்ச
னமதமருவினரே.

சு - கீர்த்தனம் - இராகம் - தருபார் - மி - சாபுதாளம்.

பல்லவி.

வருந்திமயங்கிவிழுந்தார் தருமசேனர் (வருந்தி)

அநுபல்லவி.

அருந்தவங்கோப்பண்டு புரிந்தநிற்குறை கொஞ்சம்
இருந்ததனும்சென்மம் பொருந்தும் கொண்டரையாள
ஐயரும் வீலை செய்யச் சூலை
வெய்யநோயையிவர்க்கு விடவுமந்த வேலை (வருந்)

சரணங்கள்.

க. வடவனல்விடஞ் சூலப் படைவேல்களெனவயிற்
றிடையேயெய்குடைவதைத் தடைசெய்யச்சமணர்கள்
மருவிமந் திரிக்க வன்மை தரிக்க
அரவின்விஷக்கலிக்கொண் டாற்போலதி கரிக்க (வருந்)

உ. இச்செயலைக் கண்டு கொச்சையமணர் கூடி
அச்சமாகிவிடம்போ லச்செய்யுங்கொடுஞ்சூலை
இவர்க்குற்ற தென்று யாரும் நின்று
தவமென்வலுசேர்ந்தைதளர்ந்துசூழ்ந்திடஅன்று (வருந்)

கூ. கண்ட அமணர்கள்க மண்டலநீரைக் கை
கொண்டுமந்திரித்தும் உண்டிடும்படிசெய்தும்
கைப்பீலி தூக்கிக் காதல் தேக்கித்
தப்பாமலுடம்பெல்லாந் தடவியும்மிக கோக்கி (வருந்)

சு. முன்னிலுஞ்சூலைநோ யின்னம்வளரத் துன்பம்
மன்னிநடுங்கி யிது என்னெனச் சமணர்கள்
மொழிந்துகை விடவே மோகப் படவே
ஒழிந்திடாமற்சூலை யுள்ளேருடைந் திடவே (வருந்)

சு - விருத்தம்.

வருந்துமிவர்முன்னுணர்வால்த்தமக்கையார்பால் மகிழ்ந்துசமை
ப்பவரிடவுவன்போயுங்கள், அருந்தம்பியாரோவவந்தெனென்ரு
ன் அறிவையார்நிற்குண்டோவெனலுஞ்சூலை, இருந்தவிதமொழிந்
துய்யும்படிநீகேட்டிங் கிராத்திரியில்வாவென்ருரெனலுமாதர், தெ
ரிந்ததனுக்குரைத்தபடியவன்வந்தோதக் கோர்ந்திட்டார்திருவதிகை
சேர்ந்திட்டாரே.

ரு - கீர்த்தனம் - இராகம் - சாவேரி - ரூபகதாளம்.

பல்லவி.

திருவதிகையில்த்திலதவதியார் திகழுமடத்திற் சேர்த்தார்.

அநுபல்லவி.

மருவதிகொன்றைமாலைதாழும் திருமுடியார்சிறந்துவாழும் (திரு)

சரணங்கள்.

பாவலர்புகழ்ந்தேத்து மிமயப் பாவைபங்கனே மனத்திலமையம்
பாவனைசெய்யுந்திலத வதியார் பாவச்சமண சமயக்
கோவலில்கண்ணேனென்றதையந்த வலவாளேந்தலு மிந்தத்
தீவினைவிடத்தமக்கையார் முந்த வுவ்வாய்வருமென்னமுந்தத்
(திருவதிகை)

இடரினைகானினி யெவ்விதம் விடுவதெனவெண்ணு மானிதம்
உடையவருள்செய்திடத்தமக்கையார ரடிபணிந்து புனிதம்
அடைவனெனவுமிடர்சற்றேக விடைகொள்பாய்மயிற்மேலி போக
நெடுமுறிகமண்டலம் விட்டாக வடிவைமறைத்தமனத்தன் பாகத்
(திருவதிகை)

மெய்யுமம்வழிதன்னைப்பார்த்துமெய்யில்வெள்ளோயாடைபோர்த்து
கைகொடுப்பவர்தம்மைப்பிடித்துப் பொய்யுறுமவ்வழி தீர்த்து
மையிருளினிற்சமண ரனர் வெய்யமதம்விட்டெழுந்து வானர்
உய்யவரும்வீரட் டானர் செய்யுமருள்சேர்தரும சேனர்
(திருவதிகை)

எ - விருத்தம்.

தவமாமென்றுபாயுதித்துத்தலையைப்பறித்துநிவ்வுன்னும்
அவமார்ந்சமணர்தமைநிங்கிஅழகார்திருவதிகையடைந்து
சிவமேபொருளென்றுணர்ந்திருக்குர் திலதவதியார்தமைப்பணிந்து
புவிமேலெழாமல்வருந்தியிவைபுகல்வார்சூலேஅகல்வாரே.

உ - கண்ணிகள் - இராகம் - எதுருலகாம்போதி - ரூபகதாளம்.

க. நமதுருலஞ்செய் தவத்தின் னன்மையே போலவுதித்த
உமதுபின்வந்த அடியேன் வன்மையே.

உ. அமையுந்சூலே யால் வருந்தினேன் அதுநீவிச்
சமயந்தன்னில் வந்து பொருந்தினேன்.

ங. சூலநோயை மாற்றியருளுவீர் பிழைத்திடவினி
மேலெனக்கரை யேற்றியருளுவீர்.

ச. என்றதம்பி யாரை நோக்கியே சசனையெண்ணி
கன்றியுரைக்கப் பரிவு தேக்கியே.

ரு. பொய்யுறுமதக் குழியில் விழுந்திட்டீர் ஆகையாலே
வெய்யநயசக் கடலில் ழுந்திட்டீர்.

ஞ. இனியெழுந்திரு மென்று கூறினர் தம்பியாரும்
வினைநோயுடன் எழுந்து தேறினர்.

எ. கண்டதமக்கை யாரைப் போற்றினர் அவரும்பரமர்
தொண்டுசெய்யு மென்று சாற்றினர்.

அ. அந்தவருளைத் தலையில்த் தாங்கியே தம்பியாரும்
வந்தனைசெய்தார் துயரம் நீங்கியே.

ஈ. இலகுமவ்வீரட் டானம் நண்ணியே இசையவர்தொழுத்
திலதவதியார் மனத்தில் எண்ணினியே.

கூ. ஒளிருமம்பஞ்சர கூதரமன் படுக்கவே திருநீற்றை
இசையவர்கையிற் பரிந்து கொடுக்கவே.

கக. தாழ்ந்தகம்பி யாரும் வரங்கினர் பெரியவாழ்வு
சூழ்ந்தகென்றெண்ணிமெய்யில்த்தாங்கினர்.

கஉ. தம்பியாரகத் திருளும் மடிந்ததே புறத்திருளும்
வெம்பிமடிய இரவும் விடிந்ததே.

அ - விருத்தம்.

விடியலுமேதிருப்பள்ளியெழுசிபோற்ற மெய்த்தவத்தார்திரு
மெழுக்குத்தோண்டிகொண்டு, கெடியதிருவலகுங்கொண்டன்புங்
கொண்டு நின்றதம்பியாரையுங்கொண்டாலயத்தின், கொடிகெடுவா
சலேவணங்கிவலஞ்சூழ்போது குலவுமிசையவர்பரனர்தமைவணங்கி
ப், படியுகழும்பதிகமையரருளினாலே பாடினர்திருப்பம்மீடி
சே.

ஈ - தீர்த்தனம் - இராகம் - பந்துவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

தோத்திரமொழிந்தாரே பரசமய சான்றரமொழிந்தாரே.

அநுபல்லவி.

சேர்த்திநங்களிறுபார் திருவதிகையி லற்ற
நேத்திரமூன்றுடைய நிமலர்மகிழப் பெற்ற(தோ)

சரணங்கள்.

கற்றுமல்வாடச்செய்யும் பிணிமாயையையறுக்க
அரனர்திருவருள் கூடவே போற்றிக்

கூற்றுயினவாறு விலக்கலிலீரென்னும்
குணமாந்திருப்பதிகம் பாடவே பெரும்
காற்றுலோடும்பஞ்சுபோல் வயிற்றுறுஞ்சூலை தீரக்
கண்டடியேனுயிரோ டருள்தந்தீரென்றான் பார
ஏற்றாருட்கடலில் முழுகிப்புளகஞ் சேர
இப்புவிமேல்விழுந்து புரண்டுகண்ணீர் சோரத் (தோ)

உ. ஏதிடாத்திடல்வற்ற அருளாலாமோபொய்ம்மதம்
எனுங்குழியில்லிழுந்து வருந்தினேன் உன்றன்
மாறில்பதஞ்சேர்வாழ்வு தருஞ்சூலைதனக்குக்கைகம்
மாறில்லையெனவென்னம்பொருந்தினேன் எனலும்
கேதந்தமிழ்ப்பதிகம் பாடும்பண்பினுல் வாழும்
திருநாவுக்கரசென்றான் பெயரையுலகம் ஏழும்
கூறுகவென்றுவிண்ணில் ஒருவாக்குக்கொண்டைதாழும்
சூளிர்சடையாரருளா லெழுதுங்கேட்டன்பு சூழும் (தோ)

கூ. எழுந்தவாத்தினைக்கேட்டு விடையேன்பெருஞ்செல்வமோ
இதுவென்றுனினைந்தாரா வணன்முன்னை ஆண்ட
செழுங்கருனைத்திறத்தை அறிந்துநடிப்பதுவே
திடமெனக்கருதிப்புக் கணன்றன்னை நோக்கித்
தொழுதுசெயல்தனைக்கண்டு தொண்டரெலாரும் கூடித்
துஷ்டச்சமணர்செயல் தொலைந்ததென்றார் நாடி
முழுங்குகடலெனப்பல் லியவோசையெங்கும் கீடி
மொய்க்கநாவுக்கரசர் பரம்பொருளைக்கொண் டாடித் (தோ)

கூ - விருத்தம்.

செய்யதுதிசெய்துவெள்ளைமெழுண்டு தியானமுஞ்சேர்த்தமிழ்ப்
பதிகவாக்குமபொங்கக், கையிலுழவாரமுடன்கைத்தொண்டாற்றிக்
கடும்பிணிதீர்த்தரனேயோர்பொருளாவென்னினித், துய்யபனி
கொதுங்கருனைத்திறம்யார்பெற்றார் தலங்கென்போலென்றுவாழ்
சார்போற்றி, வெய்யபிணிதீர்ந்திருந்தாரினைக்கேட்டு வினைசெய்யச்
சமணர்கள்யோசனைசெய்தாரே.

எ - கீர்த்தனம் - ராகம் - கல்யாணி - திரிபுடதாளம்.

பல்லவி.

யோசனைசெய்தாரே சமணர்கள் யோசனைசெய்தாரே.

அனுபல்லவி.

ஆசையாய்ச்சைவரெறி அடைந்துசூலை கீழ்நி
வாசருசெய்வனக்கேட்டமனத்திற்பொருமைதாங்கி (யோ)

சரணங்கள்.

க. தருமசேனருக் குற்ற சூலையையின்
கொருவராலும கற்ற முடியாமையால்
பெருமைச்சைவராயிப் பெருஞ்சூலையொழிந்துய்ந்து
மருவலாற்சமண்மதம் மாளுமென்று கைந்து (யோ)

உ. பலமதங்களோ வென்று கஞ்சமயத்தை
நிலையாக்கினவ ரின்று பிரித்ததனுல்
தொலையும்நிமதமெனச் சொல்லியுள்ளம் நொந்து
தலையும்பீலியுந்தாழத் தளர்ந்தோரிடத்தில் வந்து (யோ)

ங. இவ்வகைதனை யின்று வேந்தனறிந்தால்
மெய்வகையறிந்து நின்று நமைக்கோபித்துச்
சைவருமிகுந்தொழில் தவிர்ப்பானினி மேலே
செய்வதென்னெனவஞ்சஞ் செய்திடவுருக் காலே (யோ)

ச. சைவதர்மத்தைக் மேவலால் தருமசேனர்
மெய்யிற்சூலை காவலால் தீர்ந்திலதென்று
பொய்யருக்திம்மதம் போகத்தாண்டி நல்ல
